www.janasakthi.in janasakthieditor@gmail.com janasakthi Tholaikatchi CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி CPI 100 Years 1925-2025

மலர் 88 | இதழ் 2 | 2025 ஏப்ரல் 13 - ஏப்ரல் 19 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15


வாய்மையே வெல்லும்





# பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு புதிய உச்சம் 9.69%



**சாதனை வளர்ச்சி வீதம்**

தமிழ்நாடு 2024-25 ஆம் ஆண்டில் 9.69% வளர்ச்சி வீதத்துடன் இந்திய அளவில் முதலிடம். கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சி.

**குவியும் முதலீடுகள் - பெருகும் வேலைவாய்ப்புகள் (2021-2025)**

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் : 895
முதலீடுகள் : ரூ.10,14,368 கோடி
வேலைவாய்ப்புகள் : 32,04,895

**சீரான வளர்ச்சி**

2021-22 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8%- க்கும் அதிகமான வளர்ச்சி வீதத்துடன் நிலையான பொருளாதார முன்னேற்றம்

**எதிர்கால இலக்கு**

நீடித்த வளர்ச்சி மற்றும் அதிகரிக்கும் முதலீடுகள் மூலம் 2032-33 ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற நிலையினைத் தமிழ்நாடு அடையும்.

செ.ம.தொ.இ./351/வரைகலை/2025

## எல்லார்க்கும் எல்லாம் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600 009

கட்சிக் கடிதம்

# படமெடுத்து ஆடும் பாசிசம்



போர்க்குணமிக்க தோழர்களே!

**அரசாங்கத்து கோழி முட்டை அம்மியை உடைக்கும் என்பது பழைய பழமொழி! அது பழையது அல்ல, நிஜத்தில் நம் வாழ்க்கையில் அன்றாடம் நீக்கமற நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.**

அதிகார பலம், மிரட்டல் பலம், பணபலம் எனப் பல பலன்களைக் கொண்ட மிருக பலத்தோடு, நாட்டு மக்களிடையே பெரும் மோதலை, பயங்கரமான போரை நிகழ்த்தி கொண்டுள்ளது ஒன்றிய மோடியாரின் அரசு.

ஜனநாயகப் போர்வையை மிக பலமாகப் போர்த்திக் கொண்டு, நாக்பூர் எஜமானர்களின் உத்தரவுகளை ஒவ்வொன்றாகப் பிசிறின்றி நிறைவேற்றி வருகின்றது மோடியாரின் அரசு.

நிறைவேற்றும் ஒவ்வொன்றும் சட்ட பூர்வமாக நிறைவேற்றி வருகிறது.

கருமேகங்கள் சூழ்ந்து வருவதைப் போன்று, நாட்டிற்கான பேராபத்து ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே வருகின்ற ஆபத்தை, ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுடையோர் அனைவரும் ஆழ்ந்து பரிசீலிப்பார்கள் என்றே கருதுகின்றோம்.

தெருக்கோடியில் உள்ள ஒரு குடிசை வீடு தீப்பற்றி, பெரும் சுவாலையோடு எரிவது கண்டு, அடுத்தடுத்த வீட்டுக்காரன் மட்டுமல்ல, கடைசி வீட்டுக்காரனும் கவலைப்படவில்லை எனில், அவனது வீடும் தீக்கரையாகும் என்கின்ற எதார்த்தத்தை உணராமல், நமக்கு ஒன்றும் ஆபத்து இல்லை என்று கடைக்கோடி வீட்டுக்காரன் கருதினால், அவன் தனக்கு ஏற்பட உள்ள ஆபத்தை உணரவில்லையா? அல்லது உணர முடியவில்லையா? அல்லது உணர்ந்தும், உணராதவன் போன்று நடிக்கிறானா? எனப் பல பல கேள்விகள் எழுகின்றன.

நம் நாட்டில் வாழும் குடிமக்களில் இஸ்லாமியர்களும் உண்டு. அவர்கள் நம் மக்கள். நம் சகோதரர்கள்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை நாட்டை விட்டு வெளியேற்ற அவர்களின் பங்களிப்பும் மகத்தானது.

இந்தியா, பாகிஸ்தான் என நாடு இரண்டாகப் பிளவுண்ட போது, இஸ்லாமியர்கள் அனைவரும் பாகிஸ்தானுக்கு வாருங்கள் என அழைத்த போது, அதனை நிராகரித்து, எங்களது தாய் நாட்டை விட்டு வரமாட்டோம் என உறுதிபட தாயகத்தை நேசித்தவர்கள் நம் இஸ்லாமியப் பெருமக்கள்.

அவர்களை எப்பாடு பட்டாவது நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று இன்று, நேற்றல்ல கடந்த 100 ஆண்டு காலமாக வெறித்தனத்தோடு செயல்பட்டு வருகின்ற அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ் என்ற பத்தாம் பசலிக் கொள்கையுடைய அமைப்பு.

இந்தியக் காலாச்சாரத்தைக் காக்கும் மாபெரும் அமைப்பு என்றும், மாபெரும் ஆலமரம் என்றும், உலகினில் ஆகப்பெரிய சேவை அமைப்பு என்றும், அவ்வமைப்பில் பயின்ற மாணவன் என்றும் இன்றைய பிரதமர் மோடியார் அண்மையில் வானளாவப் புகழ்ந்து, போற்றியதை அறிவோம்.


ஆர்.எஸ்.எஸ்ஓர்கலாச்சார ஆலமரமல்ல, மாறாக மரத்தில் முளைத்துள்ள, மரத்தையே அழிக்கக் கூடிய புல்லுருவியாகும்!

புல்லுருவி மரத்தில்தான் முளைக்கும். மரத்தினில் உள்ள சத்தைத்தான் உறிஞ்சி வளரும். எந்த மரத்தைக் கொண்டு வளர்ந்ததோ, அம்மரத்தையே சாகடித்து விடும். அத்தகைய புல்லுருவி போன்றதுதான் ஆர்.எஸ்.எஸ்.

நாட்டைப் பற்றி, தேசபக்தியைப் பற்றி, தியாகத்தைப் பற்றிப் போற்றிப் புகழும். ஜனநாயகம் குறித்து நாளெல்லாம் பேசும். ஆனால் உண்மை என்ன?

மரத்தின் பசுமை நிறைந்த இலைகளுக்கிடையே புல்லுருவி மறைந்திருப்பதை யாரும் எளிதில் அடையாளம் காண இயலாது! ஏனெனில் மரத்தின் இலைகள் பச்சையாக பசுமையாக இருக்கும். புல்லுருவி இலைகளும் பசுமை நிறைந்ததே.

அடையாளம் காண்பது எளிதல்ல, காணவில்லை எனில், மரத்தைப் புல்லுருவி



கொன்றழிக்கும் சக்தி வாய்ந்தது.

அத்தகைய புல்லுருவிக்கும், ஆர்.எஸ்.எஸ் இயக்கத்திற்கும் வேறுபாடு கிடையாது.

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் பாஜக இல்லை. கடந்த 2024 நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக 240 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

கடந்த 2019 நடைபெற்ற தேர்தலில் 303 இடங்களில் வெற்றி பெற்ற பாஜகவை, மக்கள் தோற்கடித்துள்ளார்கள் என்பதனை பாஜக உணர்ந்தபாடில்லை.

மைனாரிட்டி அரசாக இருந்த போதும், கொள்கையற்ற கட்சிகளின் ஆதரவோடு, அதிகார பீடத்தில் அமர்ந்துள்ளது.

மைனாரிட்டி அரசு என்ற போதும், தனது எஜமானர் ஆர்எஸ்எஸ்சின் அடாவடித்தனமான கொள்கைகளை, மிக மூர்க்கத்தனமாக நிறைவேற்றி வருகின்றது.

அதில் ஒன்றுதான் வஃக்பு திருத்த சட்டம். இச்சட்டத்தின் மூலமாக, நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான இஸ்லாமியப் பெருமக்களுக்கு எதிரான ஒரு யுத்தத்தை மேற்கொண்டுள்ளது.

அது போன்றுதான் தேசியக் கல்விக் கொள்கை என்பதையும், வலுக்கட்டாயமாகத் திணிக்க முயல்கின்றது.

தேசியக் கல்விக் கொள்கை என்பது ஆர்.எஸ்.எஸ்சின் நான்கு வர்ணக் கொள்கையின் படி, பெரும்பாலான மாணவர்களைக் கல்வியில் இருந்து வெளியேற்றும், மிக அபாயகரமான கொள்கையாகும்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலங்களில், மும்மொழித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றதா எனில் இல்லை என்பதே பதில்.

ஒன்றிய அரசால் தமிழகத்தில் நடத்தப்படும் பள்ளிகளில், தமிழ் ஆசிரியர்கள் உண்டா எனில் இல்லை.

இவ்வாறு இருக்க, மாநில அரசு நடத்தும் பள்ளிகளில் கட்டாயமாக மூன்றாவது ஒரு மொழி, கற்க வேண்டும் என்று அடம் பிடிப்பதன் நோக்கமென்ன?

தமிழக மாணவர்கள் தலையில் மேலும் கல்விச் சுமையை அதிகரித்து, 10, 12 ம் வகுப்பு போல 3, 5, 8 ஆம் வகுப்புகளிலும் பொதுத் தேர்வு நடத்தி அதன் விளைவாக அவர்கள் கல்வி நிலையத்திலிருந்து வெளியேற வேண்டும் என்ற உள்நோக்கமின்றி, வேறு என்னவாக இருக்க முடியும்?

ஒன்றிய அரசின் உத்தரவை ஏற்கவில்லை எனில், உனக்கு நிதி கொடுக்க முடியாது என்று வீராப்பு பேசுவதுதான் ஜனநாயகமா?

மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்க மறுப்பது ஏன்?

4000 கோடி ரூபாய் கொடுக்காத காரணத்தால் பல மாதங்களாக, தமிழகத்தைச் சேர்ந்த ஏழை, எளிய மக்கள், பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள், முதியோர்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒன்றிய அரசு இரக்கமற்ற முறையில் பழி தீர்க்கும் வஞ்சகச் செயலோடு செயல்பட்டு வருவது கவலைக்கும், கண்டனத்திற்கும் உரியது.

தன் கட்சி அல்லது தன் தோழமைக் கட்சி ஆட்சியில் இல்லாத மாநிலங்களை வஞ்சிப்பதும், ஆளுநர்களைக் கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அரசுக்கு எதிராகச் செயல்படுவது என்ற அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயலில் ஈடுபடுவது அநாகரிகத்தின் உச்சம் என்பதனை, உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு உறுதி செய்கின்றது.

தமிழக ஆளுநரின் செயல்பாடு சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்துள்ளது. தனக்குத் தனி அதிகாரம் இருப்பதாக ஆளுநர் கருதக் கூடாது. முதலமைச்சரின் ஆலோசனை ஏற்றுச் செயல்பட வேண்டும் என்றெல்லாம் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம், ஆளுநரின் அத்துமீறிய ஜனநாயக விரோதப் போக்கைத் தோலுரித்துக் காட்டியள்ளது.

என்ன செய்யப் போகின்றார் ஆளுநர்? நீதிமன்றத் தீர்ப்பிற்கு மதிப்பளித்து குடியரசுத் தலைவர் ஆளுநரைப் பதவி நீக்கம் செய்வாரா?

மொத்தத்தில் பாசிசப் பாம்பு படமெடுத்து ஆடிக் கொண்டுள்ளது. அதனை தடி கொண்டு தான் அரசியல் ரீதியாக எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும்.

கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமை தேவை! இடதுசாரிகளின் ஒற்றுமை தேவை, ஜனநாயக சக்திகளின் ஒற்றுமை தேவை, முன்னைக் காட்டிலும் மிக அதிகத் தேவை!

நாடு காக்கப்பட வேண்டும். நாட்டின் சுதந்திரம் காக்கப்பட வேண்டும். அதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை.

மீண்டும் சந்திப்போம்,

வணக்கம்,

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 | இதழ் 2 | 2025 ஏப்ரல் 13 - ஏப்ரல் 19 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## வக்ஃபு வாரிய சட்டத் திருத்த மசோதாவை திரும்பப்பெற வலியுறுத்தி

# தமிழ்நாடு முழுவதும் சிபிஐ ஆர்ப்பாட்டம்





**இஸ்லாமிய மக்களின் சமூக சொத்துக்களைப் பராமரித்து வரும் வக்ஃபு வாரிய சட்டத்தில் திருத்தம் செய்து, இஸ்லாமிய மக்களின் உரிமைகளை பறிக்கும் மசோதாவை ஒன்றிய பாஜக அரசு நிறைவேற்றியுள்ளது.**

எதிர்கட்சிகள், ஜனநாயக சக்திகளின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும், திருத்தங்களையும் முற்றாக நிராகரித்து விட்டது. இந்த சட்டத் திருத்தம் உடனே நடைமுறைக்கும் வந்துள்ளது.

வக்ஃபு சட்டத் திருத்த மசோதவை நிறைவேற்றிய ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்தும்,வக்ஃபுசட்டத்திருத்தமசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஏப்ரல் –9 அன்று தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. சென்னையில் பல்வேறு இடங்களிலும் கோவை, திருப்பூர், திருச்சி, ஈரோடு உட்பட தமிழ்நாடு முழுவதும் எழுச்சியுடன் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

### உச்சநீதிமன்றத்தில் சிபிஐ வழக்கு



வக்ஃபு சட்டத் திருத்தத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வழக்குத் தொடர்ந்துள்ளது.

ஒன்றிய பாஜக அரசு வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் எதேச்சதிகாரமாக நிறைவேற்றியதுடன், உடனே நடைமுறைக்கும் கொண்டுவந்துள்ளது.

இந்த வக்ஃபு சட்டத் திருத்தத்திற்கு எதிராக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பொதுச்செயலாளர் டி.ராஜா உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். மதவெறி பாசிஸ்ட்டுகளுக்கு எதிராக “மக்கள் மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் மட்டுமல்ல, நீதிமன்றங்களிலும் சட்டப் போராட்டம் தொடரும்” என பொதுச்செயலாளர் டி.ராஜா தெரிவித்தார். “அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாத்து, சமூக நல்லிணக்கத்தை நிலைநாட்டி, வகுப்புவாத, மதவெறி, சாதிய சக்திகளை சமூக வாழ்வில் இருந்து வெளியேற்றும் வரை போராட்டத்தை முன்னெடுப்போம்” என்றும் அவர் கூறினார்.

## மாநில உரிமைகளைப் பாதுகாத்துள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

### இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்பு



ஒன்றிய அரசு அதிகாரத்தில் உள்ள பாஜக, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர் மூலமாக பல்வேறு நெருக்கடிகளை கொடுத்து வருகின்றது. குறிப்பாக தமிழ்நாட்டில் ஆளுநர் பொறுப்பில் இருக்கும் திரு ஆர்.என்.ரவி, அவர் நியமனம் செய்யப்பட்ட ஆரம்ப நாளில் இருந்து, மக்களால் தேர்வு செய்து அமைத்துள்ள திமுக மாநில அரசுக்கு எதிராக ஏராளமாக இடையூறுகளையும், தடைகளையும் ஏற்படுத்தி வருகிறார்.

அரசியலமைப்பு சட்டத்தின்படி பதவிப் பிரமாணம் செய்து, ஆளுநர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திரு ஆர்.என்.ரவி, அரசியலமைப்பு வழங்கியுள்ள அவரது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தவில்லை. மாறாக, அதிகார அத்துமீறலில் ஈடுபட்டு, தனக்கு வானளாவிய அதிகாரம் இருப்பதாக ஆணவக் கொடி பிடித்து ஆடி வந்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மாண்புகளையும், மரபுகளையும் உடைத்து அவமதித்து வந்தார். சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பிய மசோதாக்களை கிடப்பில் போட்டு, மக்கள் நலனுக்கு எதிராக செயல்பட்டு வந்தார். பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்கள் நியமனத்தில் தமிழ்நாடு அரசின் உரிமையை நிராகரித்து, தமிழகம் எதிர்த்து வரும் புதிய கல்விக் கொள்கையை குறுக்கு வழியில் திணித்து, செயல்படுத்தும் செயலில் ஈடுபட்டு வந்தார்.

ஆளுநரின் வரம்பற்ற, அதிகார அத்துமீறலை எதிர்த்து, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் உரிமை மனுக்களை தாக்கல் செய்து சட்டப் போராட்டத்தை நடத்தி வந்தது.

இன்று (08.04.2025) உச்ச நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அமர்வு வழங்கிய தீர்ப்பு மாநில உரிமைகளை நிலைநாட்டி, ஆளுநரின் அதிகார அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு சம்மட்டி அடி கொடுத்துள்ளது.

அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 200ன் படி செயல்பட வேண்டியவர் ஆளுநர். ஆனால், தமிழ்நாடு ஆளுநர் அரசியலமைப்பு வழங்கிய கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளார்.

ஆளுநர் அமைச்சரவையின் முடிவுப்படி தான் செயல்பட வேண்டும். அவருக்கென தனி அதிகாரம் ஏதும் இல்லை.

பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்கள் நியமனத்தில் ஆளுநர் தலையீடு தேவையில்லை. அது மாநில அரசின் உரிமையாகும்.

தமிழ்நாடு சட்ட மன்றம் நிறைவேற்றிய பத்து மசோதாக்களை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது சட்டவிரோதமாகும். அந்த மசோதாக்களுக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளிக்கிறது. அவைகள் உடனடியாக அமலுக்கு வருகின்றன.

இனி வரும் காலங்களில் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, அரசு அனுப்பி வைக்கும் மசோதாக்கள் மீது ஆளுநர் 30 நாட்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும். குடியரசுத் தலைவருக்கு அனுப்பும்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### மார்க்சிஸ்ட் கட்சி பேராயத்தில் சிபிஐ பொதுச்செயலாளர் டி.ராஜா பேச்சு

உலக முதலாளித்துவ அமைப்பு ஆழமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. புதிய தாராளமய தாக்குதல் பெரும்பான்மையினருக்கு செழிப்பையோ, குறைந்தபட்ச வாழ்வாதாரத்தையோ கூட கொண்டுரவில்லை.

... பக்கம் 5

### வாய்ச்சொல் வீரர் மோடி

2023 – 2024 பட்ஜெட்டில் ஒன்றிய அரசு மற்றும் ஒன்றிய அரசுத்துறைகளின் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடான 19.4 லட்சம் கோடி ரூபாயில், 4.25 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீட்டில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது.

... பக்கம் 6

### விவசாயிகள் படை திரளட்டும்!




அகில இந்திய விவசாயிகள் சங்கம் நாட்டைக் காப்பாற்ற நாகையில் ஏப்ரல் 15, 16, 17 ல் கூடுகிறது. போராட்ட வியூகங்களை வகுக்க நாடு முழுவதும் இருந்து தளபதிகள் வருகின்றனர். புதிய வரலாறு படைக்க இருக்கின்றனர். இறுதிநாள், இலட்சம் விவசாயிகள் பங்கேற்கும் பெரும் பேரணி நாகை மண்ணில் நடைபெற உள்ளது.

... பக்கம் 7

### வக்ஃபு சொத்துகளுக்கு ஆப்பு வைக்கும் ஒன்றிய அரசு

வறுமை, பண வீக்கம், பணத்தின் மதிப்பில் வீழ்ச்சி, வேலையின்மை, சிறுகுறு நடுத்தரத் தொழில்களின் முடக்கம், சுற்றுச்சூழல் மாசுபாடு.. இப்படி பல்வேறு பிரச்சனைகள் மக்களை வாட்டுகின்றன. வாழ்விழந்து திகைத்து நிற்க வைத்துள்ளன. ஆனால் மதவெறி தலைக்கேறிய சங் பரிவாரம், இந்தியாவின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் காரணம் இஸ்லாமியர்கள்தான் என்று கட்டமைத்து வருகின்றது. அரசுக் கட்டமைப்பையே பாசிச மயமாக்கி வருகின்றது.

... பக்கம் 8

### இந்தி எனும் பயனிலா சுமை

இந்தி ஒரு தேசிய மொழி அல்லது இணைப்பு மொழி அல்லது தொடர்பு மொழி என்ற தகுதியை நடைமுறையில் எந்த வகையிலும் பெற்றுவிடவில்லை. இந்தியும் ஒரு குறிப்பிட்ட, குறுகிய பகுதியில் வாழ்கின்ற மக்களால் பேசப்படுகின்ற ஒரு மொழி என்ற நிலையை மட்டுமே கொண்டுள்ளது.

... பக்கம் 14

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 02

# ஆர்.என்.ரவியே வெளியேறு!

ஆட்டம் போட்டு வந்த ஆளுநர் ஆர்.என்.ரவியின் தலையில், உச்ச நீதிமன்றம் ஓங்கி இன்னொரு குட்டு வைத்திருக்கிறது.

வந்ததிலிருந்து அட்டகாசம் தாங்கவில்லை. பேரறிவாளன் விடுதலையை ஏற்க முடியாது எனத் தடுத்து, நீதிமன்றத்தில் முதல் குட்டு வாங்கியது. தூத்துக்குடி ஸ்டெர்லைட்டை மீண்டும் திறக்க வேண்டும் என்று வலியுறுத்தி, மீண்டும் நீதிமன்றத்தில் அடுத்த குட்டு வாங்கியது.

நீட் எதிர்ப்பு மசோதாவுக்கு ஒப்புதல் தராவிட்டால் அது செத்துப் போனதாக அர்த்தம் என்று கூறியது!

பாரதிதாசன் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில், தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் படித்ததே இல்லை என்று குற்றம் சாட்டியது, மும்மொழி திட்டத்தை ஏற்குமாறு ஆசிரியர்களுக்குப் பரிந்துரைத்தது.

நாடு முழுக்க, தலித் பெண்கள் மீது இழைக்கப்படும் பாலியல் குற்றங்களில் சரி பாதி தமிழ்நாட்டில் நடப்பதாகவும், மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குற்றங்கள் 40% அதிகரித்ததாகவும், சட்டம் ஒழுங்கு முழுமையாகச் சீர்குலைந்து விட்டதாகவும் பொய்த் தகவல் பரப்பியது,

சட்டப்பேரவையில் அரசு தந்த உரையில் சில சொற்களைச் சேர்த்து, சில சொற்களைத் தவிர்த்து படித்தது, தமிழ்நாட்டை தமிழகம் என்று பெயர் மாற்றியது, திராவிட மாடல் செத்துப்போன சித்தாந்தம் என்றது,

தமிழ் தாய் வாழ்த்தில் ‘திராவிட நல் திருநாடு, என்று சொல்லை நீக்கிப் பாட வைத்தது, காரல் மார்க்ஸால் இந்தியாவின் தேசிய வளர்ச்சி சேதப்பட்டு விட்டதாகப் பேசியது...

என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

அரசியல் சாசனத்தைக் காலில் போட்டு மிதிக்கும், ஆளுநர் ரவியைத் திரும்பப் பெறக்கோரி, பல்லாயிரக்கணக்கான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் 2022 டிசம்பர் 29ம்தேதி அன்று ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டார்கள்.

ஆளுநர் ரவி, கிடப்பில் போட்டுள்ள மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கக் கோரி, தமிழ்நாடு அரசு தொடுத்த வழக்கில், ஏப்ரல் 8ல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தேர்ந்தெடுத்த சொற்களில் அந்தத் தீர்ப்பு உள்ளது.

“நிறைவேற்றப்பட்ட 12 முக்கிய மசோதாக்களை 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து எந்த முடிவும் சொல்லாமல் கிடப்பில் போட்டு வைத்திருப்பது மாநில அரசின் செயல்பாட்டுக்கு ஊறு விளைவிப்பதாகும். இது தீவிர கவலைக்குரிய விஷயமாகும்.

அரசியல் சாசனத்தில் 200 வது பிரிவின்படி, தனக்கு அனுப்பப்பட்ட மசோதா மீது முடிந்த அளவு விரைவாக ஆளுநர் முடிவெடுக்க வேண்டும்.

அவர் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கலாம், அல்லது ஏதேனும் ஆட்சேபனை இருக்குமெனில் அது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு கோரி பேரவைக்கே திருப்பி அனுப்பலாம், அல்லது தமிழ்நாட்டு எல்லைகளைத் தாண்டி வேறு மாநிலங்களையும் உள்ளடக்கியதாக மசோதா இருக்குமானால், அதனைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம்.

ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாவை, திருத்தங்கள் செய்தோ அல்லது செய்யாமலோ இரண்டாம் முறையாகப் பேரவை நிறைவேற்றி அனுப்பினால், அதற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தே தீர வேண்டும். அதை மறுப்பதற்கு அவருக்கு அரசியல் சாசனத்தின் படி அதிகாரமோ, வேறு விருப்புரிமையோ இல்லை.

எந்தத் தகவலும் சொல்லாமல், காரணமும் இல்லாமல் மசோதாவைக் கிடப்பில் போட்டு வைப்பது மாநில அரசை இயங்க விடாமல் தடுக்க முட்டுக்கட்டை போடுவதாகும்.

நாடாளுமன்ற ஜனநாயக மரபுகளுக்கு இசைவாக ஆளுநர் நடந்து கொள்ள வேண்டும். இதற்கு மாறாக முடிவெடுக்கவோ, தன்னிச்சையாக ஒப்புதல் தர மறுக்கவோ ஆளுநருக்கு ‘வீட்டோ’ அதிகாரத்தை அரசியல் சாசனம் வழங்கவில்லை.

மசோதாக்களைக் கிடப்பில் போடுவது மாநில அரசின் செயல்பாட்டுக்கு ஊறு விளைவிப்பதாகும்.

நிறைவாக “ஆளுநரின் செயல் சட்ட விரோதமானது, எதேச்சதிகாரமானது” என்று உச்ச நீதிமன்றம் கூறியிருப்பது, அரசியல் சாசனப் பதவியை வகிக்க அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை என்பதை வெளிப்படையாக அறிவிக்கிறது.

வழக்கமாக, ஆளுநர் பதவிக்கு மதிப்பளிக்கும் வகையில், ஒரு வாரம் பத்து நாட்களுக்குள் ஒப்புதலை அளியுங்கள் என்று நீதிமன்றம் சொல்லும்.

ஆனால் இந்த வழக்கில், ஆளுநரிடம் நிலுவையில் உள்ள மனுக்கள் அனைத்தும் ஒப்புதல் தரப்பட்டதாகக் கருதி, அவற்றைச் சட்டமாகச் செயல்படுத்தலாம் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இத்தகைய கண்டனங்களைப் பெற்றிருக்கும் ஆர்.என்.ரவி, ஆளுநர் பதவியில் இருந்து விலகி வெளியேற வேண்டும் அல்லது அவரை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

சட்டம், ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை உள்ளவர்களால் மட்டுமே அப்படிச் செய்ய இயலும்!

# தமிழ்நாடு முழுவதும் சிபிஐ ஆர்ப்பாட்டம்
















## கட்சியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு கூட்டங்கள்

கட்சியின் திண்டுக்கல் மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சக்திவேல் தலைமை வகித்தார். மாநிலத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் க.இப்ராகிம் கலந்து கொண்டு விரிவாக விளக்கினார். எதிர்காலக் கடமைகளைப் பற்றிக் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் பேசினார்.



திருப்பூர் புறநகர் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு ச.முத்துக்குமார் தலைமை வகித்தார். இதில் மாநில ஒருங்கிணைப்பாளர் க.இப்ராகிம், மாவட்ட தகவல் தொழில்நுட்பக் குழுவின் ஹெலன் ரூபி ஆகியோர் கலந்து கொண்டு விரிவாக எடுத்துரைத்தார்கள். கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக் நிறைவுரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக மோகன் தேர்வு செய்யப்பட்டார்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

மசோதாக்கள் எனில் 90 நாட்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு நல்ல அம்சங்கள் நிறைந்துள்ளன.

இப்படி, தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்லாமல் அனைத்து மாநிலங்களும் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள உச்ச நீதிமன்றம் பல வகைகளில் அரண் அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த வரலாற்று சிறப்பு மிக்கத் தீர்ப்பு அரசியல் வரலாற்றில் புதிய மைல் கல்லாக அமையும் உச்ச நீதிமன்ற தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, அதிகார அத்துமீறல் குற்றம் புரிந்துள்ள, அரசியலமைப்பு கடமை பொறுப்புகளை நிறைவேற்றாமல் அலட்சியப்படுத்திய திரு ஆர்.என்.ரவியை தமிழ்நாடு ஆளுநர் பொறுப்பில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என குடியரசுத் தலைவரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஒன்றுபட்டுப் போராடுவோம்!

**மார்க்சிஸ்ட் பேராயத்தில் டி.ராஜா வாழ்த்துரை**



**மதுரையில் நடைபெற்ற சிபிஐ(எம்) 24வது கட்சி பேராயத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா ஆற்றிய வாழ்த்துரை.**

தோழர்களே, இங்கு கூடியிருக்கும் சகோதரக் கட்சிகளின் தலைவர்களே, உங்கள் அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக புரட்சிகர வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் உழைக்கும் மக்கள், விவசாயிகள் மற்றும் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட பிரிவுகளின் போர்க்குணமிக்க மரபிலிருந்து பலம் பெற்றோம். காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக மட்டுமல்லாமல், நிலப்பிரபுத்துவம், சாதியக் கொடுங்கோன்மை மற்றும் சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதற்காகவும் தங்கள் உயிரைத் தியாகம் செய்த தோழர்களின் பூமியில் இன்று நாம் நிற்கிறோம்.

## சர்வதேச நிலைமை

தோழர்களே, உலக முதலாளித்துவ அமைப்பு, ஆழமான நெருக்கடியில் மூழ்கியுள்ளது. புதிய தாராளமயத் தாக்குதல் பெரும்பான்மையினருக்குச் செழிப்பையோ, குறைந்தபட்ச வாழ்வாதாரத்தையோ கூட கொண்டு வரவில்லை.

உலக அளவில் நிலவி வரும் சமத்துவமின்மை மிகவும் அருவருப்பானது. ஒரு சில கார்ப்பரேட் கோடீஸ்வரர்களின் ஒருங்கிணைந்த செல்வம், பல நாடுகளின் ஒருங்கிணைந்த செல்வத்தை விட அதிகமாக உள்ளது. ஐந்து கண்டங்களிலும் தொழிலாளர்களை, விவசாயிகளை, உழைக்கும் மக்களை அல்லல்படுத்தித் துயரங்களைத் தருகிற கொள்கைகளையே உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் முன்னிறுத்தி அழுத்தம் கொடுத்துச் செயல்படுத்துகின்றன.

மார்க்ஸ் சரியாகக் கணித்தபடி, “மூலதனம், தலை முதல் கால் வரை, ஒவ்வொரு துளையிலிருந்தும், இரத்தம் சொட்ட, அழுக்கடைந்து நிற்கிறது.”

ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் கூர்மையடைவதையும் நாம் பார்க்கிறோம். நேட்டோவின் ஆத்திரமூட்டும் விரிவாக்கமும், உக்ரைனில் நடந்த போரும் உலகளாவிய உறுதியற்ற தன்மையை ஆழப்படுத்தியுள்ளன, உழைக்கும் மக்கள், தமது இரத்தத்தால் விலை கொடுத்து வருகின்றனர். ஏகாதிபத்திய சக்திகளின் ஆதரவுடன் காசாவில் இனப்படுகொலை நடத்தப்பட்டது.

போர்க்குற்றங்களுக்கு உதவி செய்து துணைநிற்கும் அதேவேளையில் “மனித உரிமைகளைப்” போதிக்கும் மேற்கத்திய ஆட்சிகளின் பாசாங்கு அம்பலப்பட்டுள்ளது. லெனின், “ஏகாதிபத்தியம் என்றாலே போர்தான்” என்று நமக்கு முன்னரே எச்சரித்திருந்தார். இன்று, ஏகாதிபத்தியத்தின் தன்மையை நிர்வாணமாக உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இயற்கை வளங்களை எல்லாம் கொள்ளையடிக்கும் முதலாளித்துவம், பெரும் பருவகால நெருக்கடியை உருவாக்கி, மனிதகுலத்தின் உயிர் வாழ்க்கையையே அச்சுறுத்துகிறது. இருப்பினும், ஆளும் வர்க்கங்கள் பணக்காரர்களுக்காகக் கோட்டைகளைக் கட்டுவதில் மும்முரமாக உள்ளன, மக்களை அழிவுக்கு உள்ளாக்குகின்றன.

இதற்கெல்லாம் காரணமான சுரண்டல் முறைமையை உடைத்து, நொறுக்கி, தூக்கி எறியும் கடமையைக் கொண்ட உழைக்கும் மக்களை, பிளவுபடுத்தி, குழப்பி, அசைவற்ற நிலைக்குக் கொண்டு செல்வதில் சர்வதேச வலதுசாரி சக்திகள் ஒருங்கிணைந்து வலுவாகச் செயல்படுகின்றன. எரிகிற தீ அணைந்து விடாமல் எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருக்கின்றன.

## தேசிய நிலைமை: நெருக்கடியில் இந்தியா

தோழர்களே, தாமதமற்ற புரட்சிகரத் தலைமீட்டைக் கோரி, நமது சொந்த நிலம் தமிழ்நாடு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, திருவள்ளுவர் “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!” என்று கூறினார். இந்த உலகளாவிய, காலத்தால் அழியாத கூற்றுக்கு மாறாக, இந்தியாவில் சமத்துவமின்மை ஆழப்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம். நாம் போராட வேண்டியது இந்தக் கட்டமைப்பையும் அது வளர்ந்து வரும் சுரண்டல், பாகுபாட்டிற்கு எதிராக ஒருங்கிணைந்த போராட்டத்தை நாம் மேற்கொள்வது அவசியமாகிறது.

தோழர்களே, இந்தியா இன்று ஒரு சகிக்க முடியா முறிவுப் புள்ளியில் நிற்கிறது. பாஜக ஆர்எஸ்எஸ் ஆட்சியின் கீழ் வர்க்கம், சாதி மற்றும் ஆணாதிக்கத்தின் ஒடுக்குமுறைகள் கொடூரமாகிவிட்டன. இது மிகவும் பிற்போக்குத்தனமான முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவச் சக்திகளின் அரசியல் கருவியாகும்.

வெளிப்படையாகப் பேசுவோம்: இந்தியா மோசமான நிர்வாகத்தால் மட்டும் பாதிக்கப்படவில்லை; சுரண்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு அமைப்பின் கீழ் இந்தியா மூச்சுத் திணறி வருகிறது. பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி ஒருபோதும் இவ்வளவு வெட்கக் கேடானதாக இருந்ததில்லை. இந்த நாட்டின் உயர் மட்டத்தில் உள்ள 1% பேரிடம் இப்போது தேசியச் செல்வத்தில் 40% அதிகமான சொத்துகள் உள்ளன. அதே நேரத்தில் மக்கள்தொகையில் சரி பாதிக்கும் அதிகமானோர் ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவுக்காகப் போராடுகிறார்கள்.

“இதுவரை நடந்துள்ள மனித குல வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறுதான்” என்று மார்க்ஸும், ஏங்கெல்ஸும் எழுதினர். இந்தியாவில், இந்த வர்க்கப் போராட்டம் சமூக ஒடுக்குமுறையின் பழமையான மற்றும் மிகவும் கொடூரமான அமைப்பான சாதி அமைப்புடன் பின்னிப் பிணைந்துள்ளது.

சாதி மற்றும் வர்க்க ஒடுக்குமுறை தனித்தனியாக இல்லை. அவை ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. நில உரிமை முறைகள், ஊதியக் கட்டமைப்புகள், கல்விக்கான அணுகல் மற்றும் அடிப்படை மனிதகண்ணியம்கூட இன்னும் தலித்துகள், ஆதிவாசிகள் மற்றும் மிகவும் ஒதுக்கப்பட்ட பிரிவுகளுக்கு மறுக்கப்படுகிறது. “சாதி என்பது வெறும் உழைப்புப் பிரிவினை அல்ல; மாறாக அது தொழிலாளர்களைப் பிரிவினை செய்தது” என்று டாக்டர் அம்பேத்கர் எச்சரித்திருந்தார்.

இன்று, இந்துத்துவச் சக்திகளுடன் கைகோர்த்து, தேசியவாதத்தின் போர்வையில் அணிவகுத்துச் செல்லும் ஆளும் வர்க்கங்கள் மனு சாஸ்திரத்தை மீட்டெடுக்க முயல்கின்றன. இந்த ஆட்சியின் கீழ் ஆணாதிக்கம் கூடுதலாக வலிமை பெறுகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறை, பாகுபாடு மற்றும் சுய அதிகார மறுப்பு ஆகியவை நிறுவனமயமாக்கப்பட்டுள்ளன. உழைக்கும் மக்களைப் பிரித்து ஆணையிடுவதற்கு ஆணாதிக்கத்தைப் பயன்படுத்துவதில் ஆளும் வர்க்கங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றன.

நிலவுகிற கொடூரமான வேலையின்மை, இளைஞர்களை நம்பிக்கை இழக்க வைக்கிறது. விவசாயத் துயரங்கள், விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளுகின்றன. பொதுக் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. உழைக்கும் மக்களின் சங்கம் சேரும் உரிமை, கருத்தில் முரண்படுகிற உரிமை, கனவு காணும் உரிமை மீதும் கூட இடைவிடாத தொடர்ச்சியான தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது.

தொழிற்சங்கங்களைப் பிசாசுகள் போல சித்தரிக்கிறார்கள்.

பல்கலைக்கழகங்கள், ஆர்எஸ்எஸ்ஸின் ஆய்வுக்கூடங்களாக மாற்றப்படுகின்றன. பத்திரிகைத்துறை குற்றமயமாக்கப்படுகிறது. மதச்சார்பற்ற ஜனநாயகக் கட்டமைப்பே இந்தியக் குடியரசு என்ற நன்கு நெய்யப்பட்ட துணியில், ஒவ்வொரு நூலாக உருவப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஆர்எஸ்எஸ் பாஜககூட்டணி இந்திய அரசியலமைப்பையே வெளிப்படையாகக் குறிவைக்கிறது. அதன் அடிப்படைத் தூண்களான சோசலிசம், மதச்சார்பின்மை, கூட்டாட்சி, சமூக நீதியை அகற்ற முயல்கிறது. நமது குடியரசின் மீது அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட சித்தாந்தத் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆர்எஸ்எஸ் அமைப்பு, மக்களைத் தனித்தனிக் கூறுகளாகப் பிளவுபடுத்துகிற, வகுப்புவாத மற்றும் பாசிசச் சித்தாந்தத்தைப் பின்பற்றுகிறது. இது அவர்களை ஈர்த்திருக்கிற முசோலினி மற்றும் ஹிட்லருடைய கொள்கைகளின் தொடர்ச்சியாகும். பாஜக என்பது ஆர்எஸ்எஸ் மற்றும் சங்க பரிவார் என்று அழைக்கப்படும் பல அமைப்புகளுடன் சேர்ந்து, ஜனநாயகத்தின் மீதான பாசிசத் தாக்குதலைத் தொடுக்கிறது. நாடாளுமன்றம் போன்ற மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகளை, எவ்வாறு ஹிட்லர் மலினப் படுத்தினாரோ, அதேபோன்ற வகையில் இந்திய நாடாளுமன்றத்தையும் தேவையற்றதாக மாற்றுவதில் நம்பிக்கை கொண்டுள்ளது. சங்க பரிவார் ஒன்றிணைந்து, மதப் பெரும்பான்மையினராலும், சாதி மற்றும் மூலதனத்தாலும் எந்தக் கட்டுப்பாடுகளும் இன்றி, இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு தேவராஜ்ய, பெருநிறுவன ஆட்சியைக் கனவு காண்கிறது.

பகத் சிங், “புரட்சி என்பது மனிதகுலத்தின் பிரிக்க முடியாத உரிமை. சுதந்திரம் என்பது அழியாத பிறப்புரிமை” என்று கூறியிருந்தார். பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தை எதிர்த்துப் போராட இந்த முழக்கத்தை அவர் எழுப்பினார். அவரது வார்த்தைகளைப் பின்பற்றி ஆர்எஸ்எஸ்பாஜக கொடுங்கோன்மைக் கரங்களிலிருந்து நமது சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

## கம்யூனிஸ்டுகள் முன் உள்ள பணிகள்

தோழர்களே, தற்போதைய சூழ்நிலையை எதிர்கொள்ளும் திறத்தோடு கம்யூனிஸ்டுகளாகிய நாம் எழ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த கார்ப்பரேட் பெரு முதலாளிய, வகுப்புவாதத் தாக்குதலுக்கு எதிராக ஒரு தீர்க்கமான எதிர்ப்பை ஏற்படுத்த அனைத்து கம்யூனிஸ்டுகளும் இடதுசாரி சக்திகளும், கொள்கை ரீதியான ஒற்றுமையை உருவாக்கியே தீர வேண்டும். நாம்தான் குரலற்றவர்களின் குரலாகவும், அமைப்பாய்த் திரள இயலாதவர்களின் அமைப்பாளர்களாகவும், நம்பிக்கை யிழந்தவர்களின் நம்பிக்கையாகவும் இருக்க முடியும்.

தெருக்களில், தொழிற்சாலைகளில், கிராமங்களில், பல்கலைக்கழகங்களில் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிராக மட்டுமல்லாமல், ஆழமாக வேரூன்றிய சாதி, ஆணாதிக்கக் கட்டமைப்புகளுக்கு எதிரான போராட்டங்களை நடத்த வேண்டும். “ஜெய் பீம்,” “இன்குலாப் ஜிந்தாபாத்,” மற்றும் “லால் சலாம்” போன்ற முழக்கங்கள் வெறும் வார்த்தைகளாக இல்லாமல், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் இயக்கத்திற்கான முழக்கங்களாக இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். இது இனி ஒரு தேர்வாக இருக்காது, தோழர்களே, இது நமது புரட்சிகர கடமை.

பொதுக் கல்வி, பொதுச் சுகாதாரம், வேலைவாய்ப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பைப் பாதுகாப்பது நமது திட்டத்தின் மையத்தில் வைக்கப்பட வேண்டும். இவை “நலக் கோரிக்கைகள்” அல்ல, அவை சமூக நீதி மற்றும் மனிதக் கண்ணியத்திற்கான கருவிகள்.

முக்கியமாக, அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளபடி, அறிவியல் மனப்பான்மைக்காகவும் நாம் போராட வேண்டும். டிஜிட்டல் கருவிகள் மற்றும் செயற்கைநுண்ணறிவுஉள்ளிட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மக்களின் சேவையில் பயன்படுத்துவதற்கான சவாலை கம்யூனிஸ்ட் இயக்கம் தைரியமாக ஏற்க வேண்டும். அறிவு, தொழில்நுட்பச் சமத்துவம் மற்றும் அறிவியலைக் கடைச்சரக்காக மாற்றுவதற்கு எதிராக நாம் போராட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, “கம்யூனிசம் என்பது சோவியத் சக்தி மற்றும் மின்சாரம்” என்று நமக்குச் சொன்னவர் லெனின்தான். இன்று, அது கம்யூனிஸ்ட் வலிமை மற்றும் ஜனநாயகமயமாக்கப்பட்ட தொழில்நுட்பமாக இருக்க வேண்டும்.

## முன்னோக்கிச் செல்லும் பாதை

தோழர்களே, இது தயக்கத்திற்கான நேரம் அல்ல, நடவடிக்கைக்கான நேரம். நிலைமை மோசமாக உள்ளது. ஆனால், வெல்லக்கூடிய வாய்ப்புகளால் நிரம்பியுள்ளது. மார்க்சிஸ்டுகளாகிய நாம் முன்மாதிரியாக வழிநடத்தத் தயாராக இருந்தால், மிகப்பெரிய நெருக்கடிகள் மிகப்பெரிய வாய்ப்புகளைத் திறக்கும் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

வெகுஜனப் போராட்டங்களைத் தீவிரப்படுத்துவோம். சிவப்புக் கொடியின் கீழ் ஒடுக்கப்பட்ட தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், தலித்துகள், ஆதிவாசிகள், சிறுபான்மையினர் அனைவரையும் அணிதிரட்டுவோம். ஆர்எஸ்எஸ் பாஜகவை மட்டுமல்ல, சுரண்டல், சமத்துவமின்மை மற்றும் அநீதியை வளர்க்கும் அமைப்பையும் எதிர்கொள்வோம்.

மார்க்சியம் லெனினியம் மட்டுமே விடுதலைக்கான திறவுகோலை வழங்குகிறது. அதனை நடைமுறை மூலம் நிரூபிக்கும் வகையில் அரசியல் விவாதத்தின் மையத்தில் நமது சித்தாந்தத்தை வைக்க வேண்டும். “புரட்சிகரக் கோட்பாடு இல்லாமல், எந்தப் புரட்சிகர இயக்கமும் இருக்க முடியாது” என்று லெனின் நமக்கு நினைவூட்டினார். ஆனால், இந்தக் கோட்பாடு, பல கோடிக்கணக்கான மக்களின் கால்களோடு சேர்ந்து இயங்க வேண்டும்.

மக்கள் எழுச்சி பெறத் தயாராக உள்ளனர். அவர்களின் நம்பிக்கைக்குத் தகுதியானவர்களாக இருப்போம். எதிர்காலத்தின் நம்பிக்கை மற்றும் எதிர்ப்பின் சின்னமான செங்கொடியை உயர்த்திப் பிடிப்போம்.

முன்னோக்கிச் செல்வதற்கான ஒரே பாதை ஒன்றுபட்டுப் போராடுவதுதான்!

உங்கள் கட்சி மாநாடு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

லால் சலாம்! செவ்வணக்கம்!

தமிழில் டி.எம்.மூர்த்தி

# வாய்ச் சொல் வீரர் மோடி!



த.லெனின்

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.**

**வஞ்சக மனத்தினனது பொய்யான நடத்தையைக் கண்டு, அவனுடம்பாக அமைந்து விளங்கும் ஐந்து பூதங்களும் தம்முள்ளே சிரித்துக் கொண்டிருக்கும் என்கிறது திருக்குறள். அதுபோலதான் பிரதமர் மோடியின் பேச்சும் நடத்தையும் அமைந்துவிடுகிறது.**

சமீபத்தில் ராமேஸ்வரம் பாம்பன் பாலம் திறப்பு விழாவிற்கு வருகை தந்த பிரதமர் மோடி உதிர்த்த அரசியல் முத்துக்கள் ஒவ்வொன்றும் அவர் சுட்ட முந்தைய வடைகள் எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிட்டுவிட்டது.திறந்து வைத்த பாலமும் உடனடியாகப் பழுதுபட்டு பேசுபொருளானது.

மீனவர்களின் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் மத்திய அரசு துணை நிற்கும். மத்திய அரசின் முயற்சியால் கடந்த 10 ஆண்டுகளில் 3700 மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் இருந்து தமக்குக் கடிதம் எழுதுபவர்களின் கையெழுத்து ஆங்கிலத்திலேயே உள்ளது. எனக்கு கடிதம் எழுதும் அரசியல் தலைவர்கள், கையெழுத்தையாவது தமிழில் போடுகள்.

வளர்ச்சியைடந்த பாரதம் நோக்கிய பயணத்தில், தமிழ்நாட்டுக்கும் பெரிய பங்கு இருக்கிறது. தமிழ்நாட்டின் வல்லமை வளர்ச்சியைப் பொருத்து, பாரதத்தின் வளர்ச்சியும் விரைவாகும்.

தேசத்தின் அனைத்து இடங்களிலும் பாஜக தொண்டர்கள் மக்களுக்கு சேவை ஆற்றுவதைப் பார்த்து பெருமைப்படுகிறேன். சேவையாற்றும் கோடிக்கணக்கான பாஜக தொண்டர்களுக்கு நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன். நன்றி, வணக்கம், மீண்டும் சந்திக்கிறேன் எனத் தனது உரையை பிரதமர் மோடி நிறைவு செய்தார்.

அரசு விழாவை எப்படியெல்லாம் சொந்தக் கட்சி அரசியல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்த முடியும் என்பதற்கு அதுவும் தேர்தல் காலம் என்றால் இதற்காகவே வருவதும், வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும் எப்போதும் அவர் பின்பற்றுவது ஆகும்.

2014 க்கு முன்னர் வரையில் திமுக கூட்டணி ஆட்சியில்இருந்ததைவிட, கடந்த 10 ஆண்டுகளில் மூன்று மடங்கு அதிக நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளது. இது, தமிழ்நாட்டின் பொருளாதாரம் மற்றும் தொழிற்துறை வளர்ச்சிக்கு அதிகளவில் ஒன்றிய அரசு உதவியுள்ளது என்று பேசியுள்ளார்.

தமிழ்நாட்டின் கட்டமைப்புதான், பாரத அரசின் முதன்மை. கடந்த 10 ஆண்டுகளிலே, தமிழ்நாட்டின் ரயில்வே துறை பட்ஜெட்டில் 7 மடங்குக்கும் அதிகமாக அளிக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் செய்தபின்னரும் சிலர் அழுதுகொண்டே இருக்கின்றனர். அவர்களால் அழ மட்டுமே முடியும்; அவர்கள் அழுதுவிட்டுப் போகட்டும் என்று பேசியுள்ளார். அதிகம் வரி கொடுத்து அழுகிற காரணத்தால்தான் அதைத் திரும்பக் கேட்கிறார்கள் என்பது புரியாமல் பேசி உள்ளார்.

2014 ஆண்டுக்கு முன்னர் வரையில், ஒவ்வோர் ஆண்டும் ரயில் துறை திட்டங்களுக்காக வெறும் ரூ.900 கோடி மட்டுமே கிடைத்து வந்தது. அப்போதெல்லாம் கூட்டணியில் யார் ஆட்சி அமைத்திருந்தார்கள் என்பதைக் கூறத் தேவையில்லை. இந்தாண்டு, தமிழ்நாட்டின் ரயில் பட்ஜெட் ரூ.6,000 கோடிக்கும் அதிகம் என்று வானளாவிய முறையில் வர்ணித்துள்ளார்.ஆனால் உண்மை என்ன? கடந்த காலங்களில் ரயில்வேக்கு ஒதுக்கப்பட்டு நடைபெற்று வரும் வேலைத்தொகையும் சேர்த்து இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது என்பதுதான் விந்தையிலும் விந்தை!

## நிலுவையில் உள்ள ரயில் பாதைத் திட்டங்கள்

திண்டிவனம் திருவண்ணாமலை (செஞ்சிவழியாக 70 கிலோமீட்டர்) புதியரயில் பாதை திட்டத்தின் மதிப்பு ரூ.900 கோடி. இந்தத் திட்டமானது 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதுவரை ரூ.72.87 கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 4 பெரிய பாலங்கள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடந்த பட்ஜெட்டில் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது வெறும் ரூ.1000 மட்டுமே.

திண்டிவனம் நகரி திட்டம் (179 கிலோ மீட்டர்) 2008 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் தற்போதைய மதிப்பு ரூ.3631 கோடி. இந்தத் திட்டத்திற்கு ரூ.806 கோடி இதுவரை செலவிடப்பட்டது. இதற்குத் தேவையான 594 ஹெக்டர் நிலத்தில் 510 ஹெக்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலம் கையகப்படுத்தபட்ட பின்னரே திட்டத்தின் பணிகள் தொடரும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த பட்ஜெட்டில் இத்திட்டத்துக்கு ரூ.153.27 கோடி மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டது.

மதுரை தூத்துக்குடி (அருப்புக்கோட்டை வழியாக) (143.5 கி.மீ.) திட்டம் 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் தற்போதைய மதிப்பு ரூ.2053 கோடி. இதற்கு 771 ஹெக்டர் நிலம் தேவைப்படுகிறது. 90 ஹெக்டர் நிலம் மட்டுமே கையகப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு பட்ஜெட்டில் வெறும் ரூ.18.72 கோடி ஒதுக்கப்பட்டது.

மொரப்பூர் தருமபுரி ரயில் பாதைத் திட்டம் (36 கி.மீ). இதன் தற்போதைய மதிப்பு ரூ.358.95 கோடி. ஆனால் இதற்கு வெறும் ரூ.49.69 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமும் நிலுவையில் உள்ளது.

காரைக்கால் துறைமுகம் பேரளம் திட்டம். இது 24 கிலோ மீட்டர் தொலைவில் அமையவுள்ளது. இது அகலப் பாதைத் திட்டத்தின் கீழும் வருகிறது. இதற்கு பிஜேபி கூட்டணி புதுச்சேரி அரசு நிலம் தரவில்லை. எனவே, இத்திட்டமும் நிலுவையில் உள்ளது.

## நிலுவையில் உள்ள அகலப்பாதைத் திட்டங்கள்

நாகப்பட்டினம் திருத்துறைப்பூண்டி வேளாங்கண்ணி திட்டம். இந்தத் திட்டத்திற்கு 100 சதவீதம் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் 11 பாலங்கள் 172 சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இது காரைக்கால் துறைமுகம் பேரளம் திட்டத்தோடு இணைகிறது. இந்தத் திட்டமும் நிலுவையில் உள்ளது.


மன்னார்குடி பட்டுக்கோட்டை திட்டம் 2011 12 நிதியாண்டில் துவங்கப்பட்டது. இதற்கு 152 ஹெக்டர் நிலம் இன்னும் கையகப்படுத்தாமல் இருப்பதால் இத்திட்டம் நிலுவையில் உள்ளது.

தஞ்சாவூர் பட்டுக்கோட்டை அகலப்பாதை திட்டம் 2012 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மதிப்பு ரூ.957.87 கோடி. இதைச் செயல்படுத்துவதற்கு 196 ஹெக்டர் நிலம் தேவை. மத்திய அரசின் உள்கட்டமைப்பு மற்றும் திட்டக் கண்காணிப்புத் துறை மாதாந்திரத் திட்ட முன்னேற்றம் தொடர்பான அறிக்கையில் இவ்விரு திட்டங்களுக்கும் விரிவான திட்ட மதிப்பிற்கு இதுவரை தொகை அளிக்கவில்லை. இதுதான் பாஜகவின் வளர்ச்சி முகம்! வாரி அளிக்கும் முறை!

## ஓரவஞ்சனையில் ஒன்றிய அரசு

ஒன்றிய அரசு நிதி தராததால் தமிழ்நாட்டில் 19,000 வீடுகளைக் கட்டும் பணி பாதிக்கப்பட்டுள்ளது. பிரதமர் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசு ரூ.847 கோடி நிதியை தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது.

தேசிய கல்விக் கொள்கை மற்றும் மும்மொழிக் கொள்கையை நிராகரித்த காரணத்தால், தமிழக மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.2,152 கோடி நிதியை மத்திய அரசு பிற மாநிலங்களுக்கு எடுத்துக் கொடுத்துள்ளது.




இது அப்பட்டமான மிரட்டல். இந்திய வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும், ஒரு மாநிலத்திற்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கையாக, கல்வியை அணுகுவதற்கான வாய்ப்புகளை நெரிக்கும் செயலைச் செய்ததில்லை. தங்கள் உரிமைகளுக்காக எதிர்த்து நின்றமைக்காக தமிழக மாணவர்களை மத்திய அரசு தண்டித்துள்ளது, இருந்தும் தமிழில் கையெழுத்து போடவில்லை என்று தமிழுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்!

தொடர்ந்து கிராமப்புற உழைப்பாளி மக்கள் போராடி வரும் 100 நாள் வேலைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு அளிக்கப்படாததால் இன்னும் பலருக்கு ஊதியம் வழங்கப்படாமல் உள்ளது.

## பொய்ச் செய்திகள் பரப்புரை! 14,200 கோடி திட்டங்களின் பட்டியல்!

மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு என்னென்ன திட்டங்களை பாஜக அரசு கொண்டு வந்துள்ளது என மாநில பாஜகவினர் கடந்த சில மாதங்களுக்கு முன் ஒரு பட்டியலைப் பகிர்ந்து வந்தனர். அதில், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டம், சென்னை விசாகப்பட்டினம் தொழில் வளர்ச்சித் திட்டம், சென்னை கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் உட்பட அந்தப் பட்டியலில் உள்ள திட்டங்களின் விவரங்களைக் குறிப்பிட்டு, அந்தப் பட்டியல் பொய்யானது என்று தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்புக் குழு மறுப்பு வெளியிட்டுள்ளது.

உலக வங்கி போன்ற வெளி நிதி நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற்றுத் தருவதற்கான இணைப்பாக மட்டுமே மத்திய அரசு செயல்படுகிறது என்றும், இந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசு தனியாக நிதி ஒதுக்கவில்லை. பட்ஜெட்டில் தமிழ்நாடு அல்லது சென்னை என்ற பெயரில் உள்ள வெளிநாட்டு நிதியுதவி பெறும் மாநில அரசு திட்டங்களை எடுத்து அவை ஒன்றிய அரசு நிதி ஒதுக்கிய திட்டங்கள் எனப் பொய்யான தகவலைப் பரப்புகின்றனர் என்றும் தமிழ்நாடு உண்மை அறியும் குழு சுட்டிக்காட்டுகிறது.

மேலும், "சென்னை மெட்ரோ ரயில் (இரண்டாம் கட்டம்) மாநில அரசின் திட்டமாகத் தொடங்கப்பட்டு, மிகுந்த காலதாமதத்திற்குப் பின்னர் தொடர் கோரிக்கைகளின் மூலம் ஒன்றிய அரசின் உதவி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. அதிலும் கூட, மாநில அரசு நிதி மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் கடன் போக ஒரு சிறு பகுதியைத்தான் ஒன்றிய அரசு வழங்குகிறது என்றும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மை ஒருநாள் வெளியாகும் அதில் பொய்யும் புரட்டும் வழியாகும் என்பது உறுதியாகி இருக்கிறது!

## நிதிக் கூட்டாட்சிக்கு எதிரான சதி!

நிதி ஆணையம் சமமான வரிப் பகிர்வு, இலக்கு மானியங்கள் மற்றும் நிதி ஒருங்கிணைப்பு ஆகியவற்றைப் பரிந்துரைப்பதன் மூலம் நிதிக் கூட்டாட்சியை ஊக்குவிக்கிறது. எதிர்காலத்தில், சீர்திருத்தங்கள் மாநிலங்களின் வருவாய்ப் பங்கை அதிகரிப்பது, ஒன்றிய மாநிலத் திட்டங்களை மறுசீரமைத்தல், ஜி.எஸ்.டி பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் உள்ளூர் அரசாங்கங்களுக்கு அதிகாரம் அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் 42 சத நிதிப் பகிர்வை அளிப்பது போல் பாசாங்கு செய்கிறது. உண்மையில் 30 சதம் நிதிதான் மாநிலங்களுக்குப் பகிரப்படுகிறது. கடந்த யுபிஏ அரசை விட பல மடங்கு நாங்கள் பகிர்ந்தளிக்கிறோம் என்கிறார்கள். யுபிஏ அரசு காலத்தில் ஜிஎஸ்டி இல்லை மாநிலங்களின் சொந்த வரி விதிப்பு பெரும் ஆதாரமாய் இருந்தது. அதில் பாதியைத் தட்டிப் பறித்த ஒன்றிய அரசு இப்போது அள்ளிக் கொடுப்பதாய் நாடகமாடுகிறது.

## நிதி வருவாய்ப் பங்குகளில் சரிவு

நிதி வளங்களை அரசியல் ரீதியாக கையாளுதல்: ஆளும் கட்சியுடன் இணைந்த மாநிலங்களுக்கு வெகுமதி அளிப்பதில் மத்திய அரசு கவனம் செலுத்துவது சமமான வளர்ச்சியைத் தடுக்கிறது.

மொத்த வரி வருவாயில் மாநிலங்களின் பங்கு கடந்த 2015–16 ஆம் ஆண்டில் 35% இல் இருந்து 2023–24 ஆம் ஆண்டில் 30% ஆகக் குறைந்துள்ளது. கூடுதலாக, அதே காலகட்டத்தில் மானிய உதவி ரூ.1.95 லட்சம் கோடியிலிருந்து ரூ.1.65 லட்சம் கோடியாகக் குறைந்துள்ளது.

மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படாத செஸ் மற்றும் சர்சார்ஜ் களின் பங்கு, 2015–16 ஆம் ஆண்டில் ரூ.85,638 கோடியிலிருந்து (மத்திய அரசின் வரி வருவாயில் 5.9%) 2023–24 ஆம் ஆண்டில் ரூ.3.63 லட்சம் கோடியாக (10.8%) அதிகரித்துள்ளது.

2023–24 பட்ஜெட்டில், மத்திய அரசு மற்றும் மத்தியத் துறைத் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டான ரூ.19.4 லட்சம் கோடியில், ரூ.4.25 லட்சம் கோடி மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீட்டில் பெரும் சரிவைப் பார்க்கலாம்.

இப்படி மாநிலங்களின் உரிமையெல்லாம் அழித்துவிட்டு ஏதோ இவர்கள்தான் நாட்டையே ரட்சிக்க வந்தவர்கள் போல பேசி வருவது பாரதி சொன்ன வெறும் வாய்ச்சொல் வீரர் என்பதைத்தான் நினைவுபடுத்துகிறது.

தொடர்புக்கு: 9444481703

# விவசாயிகள் பெரும் படை திரளட்டும்



பி.எஸ்.மாசிலாமணி

"உழுது விதைத் தறுப்பாருக்கு உணவில்லை பிணிகள் பல உண்டு,
பொய்யைத் தொழுது அடிமை செய்வோருக்கு செல்வங்கள் உண்டு,
உண்மை சொல்வோருக் கெல்லாம் எழுதரிய பெருங்கொடுமை சிறை உண்டு...
தூக்குண்டே யிறப்பதுண்டு"
(பாரத பண்பாட்டு தளத்தில் _ பாரதி)

அடிமை இந்தியாவில் அன்றைய விவசாயிகளின் நிலைகளை மகாகவி பாரதியார் இப்பாடல் மூலம் வெளிப்படுத்தினார்.

உழுபவருக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்கிற முழக்கம் சுதந்திர முழக்கமாகச் சேர்க்கப்பட்டது. அதற்கு 1936ல் தோற்றுவிக்கப்பட்ட நமது அகில இந்திய விவசாயிகள் சங்கமே (A.I.K.S) காரணம். அதற்கான போராட்டம் விடுதலை இந்தியாவிலும் தொடர்ந்தது.

1946 இல் துவங்கி ஐந்தாண்டுகள் நடந்த தெலுங்கானா போராட்டமும், 1960 61களில் தமிழ்நாட்டில் நடந்த உச்சவரம்புச்

சட்ட திருத்தப் போராட்டமும் 1970 72 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதும் நடந்த நிலமீட்புப் போராட்டங்களும் உழவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்பதும், நிலமற்றவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதற்கான போராட்டங்களாகும்.

அத்தகைய போராட்டங்களினால் பல நிலப்பிரபுத்துவக் கோட்டைகள் தகர்ந்தன.

தற்போதும் நிலத்திற்கான போராட்டம் தொடர்கிறது. நிலத்தை உழுபவன் கையிலிருந்து பிடுங்கி பெரு முதலாளிகளிடம் ஒப்படைக்கும் வகையில் போராடிப் பெற்ற சட்டங்கள் இப்போது திருத்தப்பட்டுகிறது.

நவீனப் பண்ணையாளர்களாக கார்ப்பரேட்டு கள் அரசின் தோள்களில் கைபோட்டு வலம் வருகிறார்கள்.

எனவே, இந்திய வயல்வெளிகளையும் ஏழை எளிய நடுத்தர விவசாயிகளிடமிருந்து தந்திரமாகப் பறித்து கார்ப்பரேட்டுகளின் கைகளில் ஒப்படைப்பதற்கு கார்ப்பரேட் ஆதரவு பாஜக அரசு சட்டங்களின் வாசலை அவர்கள் கொள்ளையடிப்பதற்கு ஏதுவாகத் திறந்துவைக்கிறது. வேளாண் மக்களுக்கு எதிரான மூன்று சட்டங்களை ஜனநாயகமற்ற முறையில் அராஜகமாக நிறைவேற்றிவிட்டு வேளாண் மக்களின் நன்மைக்காகத்தான் இச்சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்று பொய்யுரைக்கவும் செய்கின்றனர், விஷத்தைத் தேன் என நம்ப வைக்கின்றனர்.

தலைநகர் டெல்லியில் 13 மாதங்களாக வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தியதின் விளைவாக அச்சட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. ஆனாலும் வேறு வடிவில் அச்சட்டங்களை அமல்படுத்த தொடர்ந்து ஒன்றிய பாஜக அரசு முயன்று வருகிறது.

டிஜிட்டல் வேளாண்மை மிஷன்" திட்டத்தின் படி ஆதார் கார்டுகளைப் போல விவசாயிகளுக்கான அடையாள அட்டைகளை வழங்கிட ஒன்றிய அரசு 2817 கோடி நிதி ஒதுக்கி கிராமங்களில் வெகு வேகமாகப் பதிவு நடந்துவருகிறது.

இந்தத் திட்டத்தின் படி

*சொந்த நில பட்டாதாரர்கள்

*குத்தகை பதிவு உரிமைச் சட்டத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகள் மட்டுமே பதிவு செய்யப்படுவார்கள் என அறிவித்துள்ளனர்.

குத்தகைபதிவுச்சட்டம்பலவருடங்களாக அமல்படுத்தப்படவில்லை, இதனால் குத்தகை சாகுபடி செய்பவர்களில் 65 விழுக்காட்டு விவசாயிகள் பதிவு செய்யாமலேயே உள்ளனர். இவர்கள் இந்த கிசான் அடையாள அட்டைகளைப் பெறமுடியாது. கிசான் கார்டு அடிப்படையில் தான் அனைத்து வேளாண் பலன்கள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குத்தகை சாகுபடி மற்றும் ஒப்பந்த சாகுபடியாளர்கள்நிலத்தைவாங்கிஇருந்தும் பத்திரப் பதிவு செய்யாதவர்களுக்கு இனி அரசின் திட்டங்கள் எதுவும் பெற்றிட இயலாது. திட்டம் முறைப்படுத்தப்படாமல் அமலானால் 80% சதம் விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேறும் நிலை ஏற்படும்.

இப்படி பல தந்திரங்களை ஒன்றிய அரசு செய்துவருகிறது.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கடன் வசதி, வரிச்சலுகை, கடன் தள்ளுபடி என வாரி வழங்கும் மத்திய அரசு பெரும்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பையும் எல்லா மக்களுக்கும் உணவையும் அளிக்கும் விவசாயிகளையும் வேளாண்துறையையும் புறக்கணித்தே வருகிறது.

விவசாயிகளின் கடன் தள்ளுபடி பற்றிப் பேசினால் முகம் சுழிக்கும் பாஜக அரசு, கார்ப்பரேட்டுகளுக்குக் கடன் கொடுப்பதிலும் சரி, தள்ளுபடி செய்வதிலும் நான்குகால் பாய்ச்சலில் வேகம் காட்டுகிறது.

கடந்த 2020 ம் நிதி ஆண்டில் கார்ப்பரேட்களின் வராக்கடன் தள்ளுபடி 52387 ஆயிரம் கோடி. அதுமட்டுமல்ல கார்ப்பரேட் நிறுவனங்கள் வாங்கிய கடனில் 20 முதல் 30 விழுக்காடு குறைத்து வசூல் செய்ய ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது. பல லட்சம் கோடிகள் கடன் வாங்கிவிட்டு உல்லாச வாழ்க்கை நடத்தும் கார்ப்பரேட்டுகளிடம் மண்டியிட்டு மடிப்பிச்சை கேட்பதுபோல் கெஞ்சிக் கூத்தாடி கடனைத் திரும்பக் கட்டச் சொல்கிறது மத்திய அரசு. ஆனால், எல்லோருக்கும் சோறு போடும் விவசாயிகள் இயற்கைப் பேரிடராலும் அரசின் கொள்கை முடிவுகளாலும் நஷ்டமடைகின்றனர். அந்த விவசாயிகளிடம் கடன் வசூலில் ஜப்தி நடவடிக்கையை மேற்கொள்கிறது, கார்ப்பரேட்டுகள் கடன் வாங்கிவிட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டாலும்மீண்டும் கடன் கொடுப்பார்கள். ஆனால், விவசாயிகள் சில ஆயிரம் பாக்கிவைத்திருந்தாலும் மறுகடன் தரமாட்டார்கள்.

இந்திய வங்கிகளில் டாப் 10 கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ள கடன் தொகைமட்டுமே5லட்சம்கோடி.இவர்களில் முதல் மூன்று இடத்தை முகேஷ் அம்பானி, அனில் அம்பானியின் ரிலையன்ஸ்சும், மூன்றாவது இடத்தை எஸ்ஸார் குழுமம்தான் பிடித்துள்ளது.இவர்களுக்குச் சொத்து மதிப்பை விடக் கூடுதலாகவே கடன் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் பெயரில் வராக்கடன் இருக்கும் போதும் இவர்களுக்குக் கடன் வசதியளிக்கப்படுகிறது.

இவர்களிடம் காட்டும் கரிசனத்தை விவசாயிகளிடம் காட்டுவதில்லை.

ஏற்கெனவே உற்பத்திச் செலவு கூடுதலாகி கட்டுப்படியான விலை கிடைக்காமல் கலங்கி நிற்கும் விவசாயிகளை மேலும் தற்கொலைப் பாதைக்கே தள்ளும் வகையில் உரவிலை உயர்வு, விதை, பூச்சிக் கொல்லி விலை உயர்வையும் ஒன்றிய அரசு தருகிறது. ஏனெனில் உரம், விதை, பூச்சிக் கொல்லி மருந்துகள் அனைத்துமே அந்நிய, உள்நாட்டுப் பெருமுதலாளிகளின் கையில் உள்ளது.

உரம் இடுவது என்பது விவசாய உற்பத்தியில் தவிர்க்க முடியாத காரணியாகும்.

உரமிடுதல் பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஏரினும் நன்றால் எருவிடுதல் சுட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" (குறள் : 1038)

பலகால் ஏர் உழுதலின், எருப்பெய்து வளப்படுத்துதல் சிறந்தது. இவை இரண்டையும் செய்தபின் களையெடுத்துப் பின் நீர்பாய்ச்சுதல் நல்லதாகும் எனக் குறிப்பிடுவார்,

இந்த எருப்பெய்தல் என்பது இயற்கை உரமிடுதலாக இருந்த காலத்தில் செலவு குறைவாக ஆனது.

இந்திய விவசாயிகளின் சொந்த சுதந்திரத் தொழில்நுட்ப அறிவு பிடுங்கப்பட்டு பராம்பரியமான விதைகள் புறந்தள்ளப்பட்டு, அயல்நாட்டு உயர் விளைச்சல் விதைரகங்கள் புகுத்தப்பட்டது. இந்த விதைகள் பெரிய அளவில் இராசயன உரங்களைப் பயன்படுத்தாமல் விளைவதில்லை. அதேபோல புதிய பூச்சிகள் தாக்குதலும் உருவாகியது.

அதைக் கட்டுப்படுத்தும் பூச்சிகொல்லிகளும் அந்நிய நாட்டு கம்பெனிகளைச் சார்ந்தேயுள்ளது. ஆக அரசுகளின் இந்தக் கொள்கை முடிவுகளால்தான் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு பல மடங்கு கூடியிருக்கிறது. மேலை நாடுகள் விவசாயிகளுக்கு முழு அளவுமானியங்கள் வழங்கி விவசாயிகளைக் காத்துவருகின்றன.

எதற்கெடுத்தாலும் அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளை உதாரணமாகக் காட்டும் பிரதமர் மோடி...

அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டு விவசாயிகளுக்கு 90 முதல் 98 விழுக்காடு வரை விவசாயிகளுக்கு மானியம் வழங்குகிறார்களே.... அதைப் பிரதமர் பின்பற்றுவாரா.

இந்தியாவில் உர மானியத்தைக்கூட உர நிறுவனங்களிடம்தான் வழங்குகிறார்களே தவிர விவசாயிகளிடம் கொடுப்பதில்லை.

தொடர்ந்து அகில இந்திய விவசாயிகள் சங்கம் உரமானியங்களை விவசாயிகளிடமே வழங்குங்கள் என்று வலியுறுத்தி வருகிறது. ஆனால், செவிடன் காதில் ஊதிய சங்காக அந்தக் கோரிக்கை கேட்பாரற்றுக் கிடக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் விளைச்சல் நிலங்கள் இருக்கிறது. விவசாயம் செய்ய யாரும் முன்வருவதில்லை. அப்படி யாராவது வந்தால் அவர்கள் தலையில் வைத்துக் கொண்டாடப்படுகின்றனர். ஆனால், இந்தியாவில் அரசு விவசாயிகளைக் கேவலமாக நடத்துகிறது.

விவசாயிகளுக்கு நெருக்கடி கொடுத்து விவசாய நிலத்திலிருந்து விவசாயிகளை வெளியேற்ற நினைக்கிறது அரசு.

ஏற்கனவே 70 விழுக்காடு கிராமப்புற விவசாயிகள் சொந்த மண்ணிலிருந்து மனக்கசப்போடு வெளியேறி உதிரிபாட்டாளிகளாக நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர்.

அரசு சிறு, குறு, நடுத்தர விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றி நிலங்களை கார்ப்பரேட்டுகளிடம் ஒப்படைத்து நவீன கார்ப்பரேட் பண்ணைமுறையை அமெரிக்கா உருவாக்கியது போல் உருவாக்க மோடி அரசு முயல்கிறது.

அதற்கு இசைவாகத்தான் பண்ணை ஒப்பந்த சேவைச் சட்டத்தை இயற்றியிருக்கிறது.

ஆனால், இந்த கார்ப்பரேட் பண்ணை விவசாய முறையை அமல்படுத்திய அமெரிக்க நிலை என்ன தெரியுமா?

இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் வரை அமெரிக்காவில் மூன்று கோடி விவசாயிகள் இருந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், விவசாயத் தொழிலை கார்ப்பரேட் வர்த்தகக் கூட்டணிகள் கைப்பற்றின.

விளைவு 2.7 கோடி விவசாயிகள் விவசாய விளைநிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

தற்போது அமெரிக்காவின் சிறையில் குற்றவாளிகள் 70 லட்சம் பேர் உள்ளனர் என்றால் அங்குள்ள விவசாயிகள் எண்ணிக்கை 7 லட்சம் மட்டுமே. அமெரிக்காவின் விவசாயக் கொள்கை அமெரிக்கப் பன்னாட்டு நிறுவன நிகழ்ச்சிநிர்லாக மாறிப்போனது.

இது இந்தியாவிற்குப் பொருந்துமா?

நிலம் என்பது இங்கு வாழ்வியல் உரிமை,

"அறமெனப்படுவது யாதென கேட்பின்
மறவாது இது கேள்
உண்டியும், உடையும், உறையும்
யென்பதைத்தவிர வேறெதுவும் மில்லை
என்பேனே"

என்று மணிமேகலை இலக்கியம் கூறுகிறது.

பசி அறுத்தல் என்பது இந்தியப் பண்பாடு. எனவே விவசாயம் இங்கு தலையான தொழில், அதுமட்டுமல்ல பெரும்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் தொழிலும் வேளாண்மையே. இதுவெல்லாம்

இந்துத்துவா சித்தாந்தத்தை ஏற்று அதை அடுத்தவர்கள் மீது திணிக்கும் பாசிச பாஜக அரசுக்குத் தெரியாது.

அவர்களின் சித்தாந்தப்படி விவசாயம் செய்பவர்கள், சூத்திரர்கள். எனவேதான் விவசாயிகளின் கோரிக்கைகளை அலட்சியம் செய்கிறார்கள்.

முற்றிலும் விவசாயிகளுக்கும், விவசாயத்திற்கும் எதிராகச் செயல்படுபவர்கள் கையில் நாடு சிக்கியுள்ளது.

சுதந்திரப் போராட்டக் களத்தில் விவசாயிகளைத் திரட்டி வீறுகொண்டு எழச்செய்த நமது அகில இந்திய விவசாயிகள் சங்கம் நாட்டைக் காப்பாற்ற நாகையில் ஏப்ரல் 15, 16, 17 ல் கூடுகிறது. பல தீர்மானங்களையும், போராட்ட வியூகங்களையும் வகுக்க இருக்கிறோம்.

நாடு முழுவதும் போராட்டத் தளபதிகள் வருகிறார்கள். நமது தமிழ்நாட்டு மண் புதிய வரலாறை படைக்க இருக்கிறது.

இறுதிநாள் இலட்சம் விவசாயிகள் பங்கேற்கும் பெரும் பேரணி நாகை மண்ணில் நடக்க உள்ளது.

புறப்படத் தயாராகி விட்டீர்களா..?

அது லட்சமாய்த் திரளட்டும். அதில் நமது லட்சியங்கள் உயரட்டும்.

## தியாகிகள் நினைவு சுடர் சங்கமம்




| சுடர் | சுடர் பெறுவோர் |
|---|---|
| பி.சீனிவாச ராவ் நினைவுச்சுடர் | பஸியா பத்மா, |
| முதல் சங்கம் தொடங்கிய தென்பரை நினைவுச் சுடர் | சத்யன் முகேரி, |
| எம்.காத்தமுத்து நினைவுச் சுடர் | பல்தேவ் சிங் நிகல்கரா |
| வெண்மணி தியாகிகள் நினைவுச்சுடர் | ராவுல வெங்கையா, |
| டாக்டர் வே.துரைமாணிக்கம் நினைவுச் சுடர் | கே.டி.சிங், |
| தியாகி சிவகுருநாதன் மற்றும் வடிவேல் நினைவுச் சுடர் | ஸ்ரீ குமார் முகர்ஜி, |
| தியாகி ஓலைபாடி கண்ணையன் நினைவுச்சுடர் தோழர் | ராஜேந்திர யாதவ், |

# வக்ஃபு சொத்துகளுக்கு ஆப்
# சட்டத் திருத்தத்தின்



வ.மணிமாறன்

**வக்ஃபு சொத்துக்களில், வக்ஃபு வாரியத்தில் முறைகேடுகள், அத்துமீறல்கள் நடக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு என்று கூறி வக்ஃபு வாரிய சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது மோடி அரசு. இதன் உண்மையான நோக்கம் என்ன? உத்தரப்பிரதேசம், அரியானா போன்ற மாநிலங்களில் வக்ஃபு சொத்துகள் நகரங்களில் குவிந்து கிடக்கின்றன. அவை கார்ப்பரேட்டுகளுக்கும் காவி சங்கிகளுக்கும் கண்ணை உறுத்துகின்றன. இதற்காகத்தான் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.**

நாடாளுமன்ற மக்களவையில் சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ ஏப்ரல் 2 ஆம் தேதி, வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை தாக்கல் செய்தார். அப்பொழுதே எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. அடுத்த நாள் மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 8 மணி நேரத்துக்கும் மேலாக கடும் விவாதம் நடைபெற்றது.

இறுதியாக நடைபெற்ற வாக்கெடுப்பில், வக்ஃபு திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக 288 உறுப்பினர்களும் எதிராக 232 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இதனால் மக்களவையில் வக்ஃபு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதேபோன்று மாநிலங்களவையில் நள்ளிரவு வரை காரசார விவாதம் நடைபெற்று நிறைவேற்றப்பட்டது.

“இஸ்லாமியர்கள் நினைத்த இடங்களை எல்லாம் வக்ஃபு என அறிவிக்கின்றனர். இதற்கு எதிராக நீதிமன்றத்திலோ அரசிடமோ முறையிட முடியாது. வக்ஃபு வாரியம், வக்ஃபு தீர்ப்பாயம் போன்றவற்றில் முறையிடச் சென்றால், அங்கு அனைவருமே இஸ்லாமியர்கள். அவர்களே விசாரித்து அவர்களே தீர்ப்பு எழுதுகின்றனர். இதில் அரசோ நீதிமன்றமோ தலையிட முடியாது. மோடி அரசு பெரும் அநீதியை அகற்றி இருக்கிறது. ஏழை முஸ்லீம்களுக்கும் இஸ்லாமியப் பெண்களுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது.” இவை அனைத்தும் பாஜகவின் பொய்த் தொழிற்சாலை மூலம் பரப்பிக் கொண்டிருப்பவை.

## நாடாளுமன்ற கூட்டுக்குழு




வக்ஃபு திருத்தச் சட்டத்தை நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்பினோம். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நீண்டநேரம் விவாதம் செய்யப்பட்டுள்ளது. இப்படி ஜனநாயக முறைகளைப் பின்பற்றித்தான் வக்ஃபு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது என்கின்றனர் பாஜகவினர்.

நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்புவது என்பது ஒட்டுமொத்த தொகுப்பும் இணைந்து, விவாதித்து முடிவெடுப்பதாகும். நாடாளுமன்ற ஜனநாயகத்தில் கூட்டுக்குழு என்பது முக்கியமான ஒன்றாகும். வக்ஃபு திருத்தச் சட்டம் நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. அங்கு திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், தேசியவாத காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் முன்வைத்த திருத்தங்கள், கோரிக்கைகளில் ஒன்றுகூட ஏற்கப்படவில்லை.

இதேபோன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சட்டத்திருத்தங்களை விவாதித்து நிறைவேற்ற வேண்டும் என்பது மரபு. இதற்காக அனைவரும் பேசுங்கள். சொல்ல வேண்டிய அனைத்தையும் சொல்லுங்கள். ஆனால், நாங்கள் எதுவும் கேட்க மாட்டோம். எந்தத் திருத்தமும் செய்ய மாட்டோம் என்பதுதான் பாஜகவின் நிலை. அதாவது எதைக் கொண்டுவர விரும்புகிறோமா, என்ன செய்ய நினைக்கிறோமோ அதை மட்டுமே செய்வோம் என்பதுதான் பாஜகவின் நடைமுறை. இதுதான் பாசிச மனநிலை.

வக்ஃபு சட்டத் திருத்தத்தை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. மத சுதந்திரத்தில் மோடி அரசு தலையிடுகிறது. மக்களை மத ரீதியாகப் பிளவுபடுத்துவது, சிறுபான்மையினர் மீதான அடக்குமுறை என நாடாளுமன்றத்திலேயே எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்தன. இது குறித்து விரிவாகப் பார்ப்பதற்கு முன் வக்ஃபு என்றால் என்ன? வக்ஃபு வாரியத்தை நிர்வகிப்பது யார் என்பது குறித்துப் பார்க்கலாம்.

### வக்ஃபு என்றால் என்ன?

வக்ஃபு (Waqf) என்பது இஸ்லாமிய சட்டப்படி, ஒரு சொத்தை அறப்பணிகளுக்காகவோ, சமயப் பணிகளுக்காகவோ தானமாக வழங்கி, அதன் வருமானத்தை பொது நலனுக்குப் பயன்படுத்துவதாகும். வக்ஃபு என்பது அரபு வார்த்தை. அதாவது தங்குதல் என்று அர்த்தம். அல்லாவின் பெயரால் ஒரு சொத்து வக்ஃபு செய்யப்படும்போது, அது என்றென்றும் அல்லாவின் பெயரிலேயே இருக்கும். அதில் எந்த மாற்றமும் செய்ய முடியாது. 1998 ஆம் ஆண்டு வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், “ஒரு சொத்து வக்ஃபு ஆனவுடன், அது என்றென்றும் வக்ஃபாகவே இருக்கும்” என்று கூறியுள்ளது. வக்ஃபு சொத்துகளை வாங்கவோ விற்கவோ, யாருக்கும் மாற்றவோ முடியாது. அதன் பயன்பாடு வக்ஃபு வாரியத்தால் கட்டுப்படுத்தப்படும்.

எளிமையாகச் சொன்னால், இந்துக்களில் கோவிலுக்கு சொத்துகளை எழுதி வைப்பதுபோல், இஸ்லாமில் கடவுளின் பெயரால் சொத்துகளை தானமாகக் கொடுப்பது என்று கூறலாம். இப்படி வழங்கப்படும் வக்ஃபு சொத்துக்களில் பள்ளிவாசல், தர்கா, அடக்கத் தலங்கள் போன்றவையும், மதரசா, மருத்துவமனை, அனாதை இல்லம், பள்ளி மற்றும் தொண்டு நிறுவனங்கள் போன்றவை செயல்பட்டு வருகின்றன.

### வக்ஃபு வாரியம்

வக்ஃபு சொத்துக்களை திறமையாக நிர்வகிப்பதற்காக, வக்ஃபு சட்டம்1995ன் படி, வக்ஃபு வாரியங்கள் அமைக்கப்பட்டன. இந்தச் சட்டம் வக்ஃபு வாரியத்துக்கு அதிகாரத்தையும் செயல்பாடுகளையும் வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் வக்ஃபு சட்டம்1995ன் படி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் செயல்பட்டு வருகிறது. இதேபோன்று நாடு முழுவதும் 35 வக்ஃபு வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன.

“வக்ஃபு வாரியத்தின் கட்டுப்பாட்டில் தமிழ்நாட்டில் மட்டும் சுமார் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களும் சொத்துகளும் உள்ளன. பழமையான பள்ளிவாசல்கள், ஈத்காக்கள், தர்காக்கள் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன” என்கிறார் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் உறுப்பினர் பாத்திமா முசாஃபர்.

### வக்ஃபு திருத்தச் சட்டம்

வக்ஃபு சட்டத்தில் 40க்கும் மேற்பட்ட திருத்தங்கள் செய்யப்பட்டு, “ஒருங்கிணைந்த வக்ஃபு மேலாண்மை, அதிகாரமளித்தல், திறன் மற்றும் மேம்பாட்டுச் சட்டம்” (Unified Waqf Management, Empowerment, Efficiency and Development Act) என்று பெயரிடப்பட்டு, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வக்ஃபு வாரியத்தின் மேலாண்மை மற்றும் நிர்வாகத்தின் செயல்திறனை மேம்படுத்தவும், பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும் சட்டத் திருத்தங்கள் தேவை என்று ஒன்றிய பாஜக அரசு கூறியுள்ளது.

வக்ஃபு திருத்தச் சட்டத்துக்கு காங்கிரஸ், திமுக, கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்டோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால், வக்ஃபு சொத்துகளின் வருமானம் எவ்வளவு? அவை யாருக்குப் போகிறது? என்ற விவரங்கள் வெளிப்படையாக இல்லை. வக்ஃபு சொத்து என்று எதை வேண்டுமானாலும் இஸ்லாமியர்கள் அறிவிக்கலாம். அதை யாரும் தடுக்க முடியாது. நீதிமன்றமோ, அரசோ கூட தடுக்க முடியாது என்று பாஜகவினர் புளுகி வருகின்றனர்.

வக்ஃபு சொத்துக்கள் ஏழை இஸ்லாமியர்களுக்குப் பயன்படவில்லை. வக்ஃபு வாரியத்தில் பெண்களுக்கோ, இஸ்லாமியர்களில் உள்ள பல்வேறு பிரிவினருக்கு வாய்ப்போ வழங்கப்படவில்லை என்றும் பாஜகவினர் கவலைப்படுகின்றனர். இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும் பாஜகவினர் கூறுகின்றனர்.




உண்மை என்ன? என்று பார்ப்போம்.

### முக்கியமான திருத்தங்களும், எதிர்ப்புக்கான காரணங்களும்

**நன்கொடை வழங்குபவர்கள் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுபவராக**

## வக்ஃபு சட்டம் ஒரு



பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வக்ஃபு சொத்துக்கள் தொடர்பாக முறைகேடுப் புகார்கள் எழுந்ததால், 1800களில் வக்ஃபு சட்டம் கொண்டுவரப்பட்டது. தொடக்கத்தில் காஜிக்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் வக்ஃபு சொத்துகளை கண்காணித்து வந்தனர். பின்னர், வக்ஃபு சொத்துகளைக் கண்காணிக்கும் பணி வருவாய் வாரியம் மற்றும் ஆணையர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

1863ல் முத்தவல்லிகளின் (வக்ஃபு சொத்துகளின் நிர்வாகிகள்) அதிகார வரம்புக்குள் மத வக்ஃபுகள் கொண்டுவரப்பட்டன. மற்ற வக்ஃபு சொத்துக்களின் நிர்வாகம் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. வக்ஃபு சொத்துகள் தொடர்பான வழக்குகளில், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அபகரிப்பதற்கு ஏற்ப பிரிட்டிஷ் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். இதனால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் வெடித்தன.

இதனையடுத்து, 1923ல் முசல்மான் வக்ஃபு சட்டம் (Mussalman Wakf Act, 1923) கொண்டுவரப்பட்டு, வக்ஃபு நிர்வாகத்தில் முறையான கணக்கும் வெளிப்படைத் தன்மைக்கான விதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. குடும்ப வக்ஃபுகளுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிப்பதற்கான சட்டம் 1930ல் கொண்டுவரப்பட்டது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, வக்ஃபு சொத்துக்களை நிர்வகிப்பதற்காக 1954ல் வக்ஃபு சட்டம் (Waqf Act, 1954) கொண்டுவரப்பட்டு, மாநில வக்ஃபு வாரியங்கள் அமைக்கப்பட்டன. இந்த வாரியத்தில் 11 உறுப்பினர்கள் இருப்பார்கள். அனைவரும் இஸ்லாமியர்கள். இப்படி 30 வக்ஃபு வாரியங்கள் அமைக்கப்பட்டன.

# ...பு வைக்கும் ஒன்றிய அரசு
# ...ர நோக்கம் என்ன?




**இருக்க வேண்டும்.**

புதிதாக இஸ்லாத்துக்கு மாறியவர்கள், வக்ஃபுக்காக நன்கொடை வழங்கும் உரிமையை இந்தத் திருத்தம் பறித்துவிடுகிறது. இஸ்லாமிய மத நடைமுறையை ஐந்து ஆண்டுகளுக்கு பின்பற்றுவது என்பதற்கான வரையறை என்ன? அதற்கு யார் சான்றளிப்பது? என்ற கேள்வி எழுகிறது. அதாவது ஒருவர் வக்ஃபு நன்கொடை வழங்க ஒன்றிய அரசிடம் ஒப்புதல் பெற வேண்டியவராகிறார். ஆனால், இந்து சமய அறநிலையத்துறைக்கு நன்கொடை அளிக்க விரும்பும் ஒருவருக்கு இதுபோன்ற கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. அரசியலமைப்புச் சட்டத்தின் 26வது பிரிவு வழங்கியுள்ள மத சுதந்திரத்துக்கு எதிரானது.

**ஒன்றிய வக்ஃபு கவுன்சில், மாநில வக்ஃபு வாரியங்களில் குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்கள் இஸ்லாமியர் அல்லாதவர்களாக இருக்க வேண்டும். வக்ஃபு வாரியத்தின் தலைமைச் செயல் அதிகாரி இஸ்லாமியராக இருக்க வேண்டும் என்ற அவசியம் நீக்கப்படுகிறது.**

அரசியலமைப்புச் சட்டத்தின் 26வது பிரிவு, மத மற்றும் தொண்டு நோக்கங்களுக்காக அமைப்புகளை நிறுவி அவற்றைப் பராமரிக்கவும், அசையும் அசையா சொத்துகளை வாங்கவும் சொந்தமாக வைத்திருக்கவும் சுதந்திரம் அளிக்கிறது. இந்த உரிமையைப் பறித்து, வக்ஃபு வாரியங்களை அதிகாரமற்றதாகவும், ஒன்றிய அரசின் விருப்பத்துக்கு ஏற்ப செயல்படுத்தக் கூடியதாகவும் இந்தத் திருத்தம் மாற்றுகிறது.

வக்ஃபு வாரியத்தின் தலைமைச் செயல் அதிகாரி இஸ்லாமியராக இருக்க வேண்டும் என்ற அவசியம் நீக்கப்படுவதன் மூலம், அரசுக்கு சாதகமான பிற மதத்தைச் சேர்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, வக்ஃபு சொத்துக்களை அரசுக்கு சாதகமாக அபகரிக்கும் வழிகள் உருவாக்கிக் கொடுக்கிறது. இப்படி இந்துசமய அறநிலையத்துறையில் மாற்று மதத்தினரை தலைமைச் செயல் அதிகாரியாகவோ உறுப்பினராகவோ நியமிக்க பாஜக அனுமதிக்குமா?

அண்மையில், தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டை அருகே ராஜகோபால பெருமாள் கோவிலின் அறங்காவலராக நர்கீஸ் கான் என்ற இஸ்லாமியரை இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் நியமித்திருப்பதாக பாஜகவினர் குற்றம்சாட்டினர். அல்லாவைத் தவிர யாரையும் கடவுளாக ஏற்றுக் கொள்ளாத இஸ்லாமியர் எப்படி இந்து கோவில்களைப் பராமரிப்பார்? அவர் எப்படி கோவில்களில் வழிபாடு நடத்துவார்? என்று பாஜகவினர் விமர்சித்தனர். நர்கீஸ்கான் என்ற பெயர் கொண்டவர் இஸ்லாமியர் அல்ல, இந்துதான் என்பது வெளிச்சத்துக்கு வந்தவுடன் சங்கிகள் வாயை மூடிக்கொண்டனர்.

தற்போது, வக்ஃபு வாரியத்தில் இஸ்லாமியர் அல்லாத இருவரை நியமிக்க சட்டத் திருத்தம் கொண்டுவந்திருப்பது எந்த வகையில் நியாயம்?

**தீர்ப்பாயங்களின் முடிவை எதிர்த்து 90 நாள்களுக்குள் உயர்நீதிமன்றங்களில் மேல்முறையீடு செய்யலாம்.**

**இந்தச் சட்டத்தின் பிரிவு 107ஐ நீக்கி வரம்பு சட்டம் 1963 (Limitation Act, 1963)-ஐ இதற்குள் கொண்டுவரப்படுகிறது. இந்த வரம்பு சட்டம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சட்ட நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு சட்டரீதியான தடையை விதிக்கிறது.**

இந்தத் திருத்தங்களால், வக்ஃபு சொத்துக்களை 12 ஆண்டுகளுக்கு மேல் ஆக்கிரமித்து வைத்திருப்பவர்கள், அதற்கு உரிமை கொண்டாடுவதற்கும், அவற்றை சொந்தமாக்கிக் கொள்வதற்கும் வழி அமைத்துத் தருகிறது. இஸ்லாமிய சமூகத்துக்கு பின்புல பலமாக இருக்கக் கூடிய வக்ஃபு சொத்துக்களை அழித்து நிராதரவாக மாற்றக் கூடியது.

**வக்ஃபு சொத்துக்களை ஆய்வு செய்ய, குறிப்பாக அரசுக்கு சொந்தமானது என்ற சர்ச்சைக்குரிய வக்ஃபு சொத்துக்களை ஆய்வு செய்ய கணக்கெடுப்பு ஆணையர்கள் மற்றும் கூடுதல் ஆணையர்களால் அங்கீகரிக்கப்பட்டு வந்த நிலையில், இனிமேல் அதற்கு மேல் தகுதியுடைய மூத்த அதிகாரிகள் இந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், இது தொடர்பான முடிவுகளில் தீர்பாயங்களுக்குப் பதில் மூத்த அதிகாரிகளே இறுதி முடிவெடுப்பவர்களாக இருப்பர்.**

இந்தத் திருத்தம், வக்ஃபு தீர்ப்பாயங்களின் அதிகாரத்தை அரசு அதிகாரிகளுக்கு மாற்றக்கூடியது. குறிப்பிட்ட சொத்துக்கு அரசும் வக்ஃபு வாரியமும் உரிமை கோரினால், அரசு அதிகாரிகளே இறுதி முடிவெடுப்பார்கள். அரசு அதிகாரிகள் எப்படி முடிவெடுப்பார்கள்? என்பது வெளிப்படையாகத் தெரிந்ததுதான்.

உத்தரப்பிரதேசம், அரியானா போன்ற மாநிலங்களில், வக்ஃபு சொத்துகள் நகரங்களில் நிறைய உள்ளன. அவை கார்ப்பரேட்டுகளுக்கும் காவி கூட்டத்துக்கும் கண்ணை உறுத்துகின்றன. அவற்றை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்குத்தான் மோடி அரசு இந்தத் திருத்தங்களைச் செய்திருக்கிறது. வக்ஃபு சொத்துகளில் பராமரிப்பதில் முறைகேடும் ஊழலும் நடக்கிறது என்றால், இந்தச் சட்டத்திருத்தம் அதனைத் தடுக்கக் கூடியது அல்ல. குரங்கு அப்பம் பிரித்துக்கொடுத்த கதை போல், வக்ஃபு சொத்துகளை கபளிகரம் செய்வதற்குத்தான் இந்தத் திருத்தம் உதவும்.

**வக்ஃபு சொத்துக்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் சட்டம் இயற்றப்பட்ட ஆறு மாதங்களுக்குள் நியமிக்கப்பட்ட போர்ட்டலில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.**

ஆறு மாதங்களுக்குள் வக்ஃபு சொத்துக்களின் தகவல்களை பதிவேற்ற முடியாவிட்டால், அந்தச் சொத்துகளை சர்ச்சைக்குரியதாக ஒன்றிய அரசு அறிவித்துவிடும். அவற்றின் உரிமை யாருக்கு? என்பதையும் அரசே முடிவெடுக்கும் சூழல் உருவாகிவிடும். இதற்குத்தான் இந்தத் திருத்தம்.

**வக்ஃபு சொத்துக்களை தணிக்கை செய்ய இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் (CAG) அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தணிக்கை செய்வதற்கு உத்தரவிட ஒன்றிய அரசுக்கு அதிகாரம்.**

வக்ஃபு கணக்குகளைத் தணிக்கை செய்யும் அதிகாரம் மாநில அரசுகளிடமே இருந்து வந்தது. தற்போது இந்த அதிகாரம் பறிக்கப்பட்டு ஒன்றிய அரசுக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் சிறுபான்மை விவகார அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, வக்ஃபு வாரியத்திடம் தற்போது இந்தியா முழுவதும் சுமார் 8.7 லட்சம் சொத்துகள் உள்ளன. அவை சுமார் 9.4 லட்சம் ஏக்கர் நிலத்தில் பரவியுள்ளன. அவற்றின் மதிப்பு சுமார் 1.2 லட்சம் கோடி ரூபாய் என்று கூறப்படுகிறது. இப்படி வக்ஃபு சொத்துகள் நாடு முழுவதும் குவிந்து கிடக்கின்றன. ராணுவம் மற்றும் ரயில்வே அடுத்து அதிக சொத்துகள் இருப்பது வக்ஃபு வாரியத்திடம் தான் என்று ஒன்றிய அரசும் பாஜக சங்கிகளும் அலறுகின்றனர்.

இந்து மதத்தில், மடங்களின் கட்டுப்பாட்டில் எவ்வளவு சொத்துகள் இருக்கின்றன? காஞ்சி சங்கரமடம், தருமபுர ஆதீன மடம், திருப்பனந்தாள் மடம், மதுரை ஆதீன மடம், நாங்குநேரி ஜீயர் மடம், ஜக்கி வாசுதேவ் மடம்.. இப்படி ஏராளமான மடங்களிடம் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் குவிந்து கிடக்கின்றன. அவை யாருக்குப் பயன்படுகின்றன? இங்கு நடைபெறும் முறைகேடுகள், ஊழல்களை தடுப்பது எப்படி? என்பதற்கு ஒன்றிய பாஜக அரசு பதிலளிக்குமா? வக்ஃபு வாரிய சட்டத்திருத்தம் போன்ற திருத்தத்தை மோடி அரசு கொண்டுவருமா?

வறுமை, பண வீக்கம், பணத்தின் மதிப்பில் வீழ்ச்சி, வேலையின்மை, சிறுகுறு நடுத்தரத் தொழில்களின் முடக்கம், சுற்றுச்சூழல் மாசுபாடு இப்படி பல்வேறு பிரச்சனைகள் மக்களை வாட்டுகின்றன. வாழ்விழந்து திகைத்து நிற்க வைத்துள்ளன. ஆனால் மதவெறி தலைக்கேறிய சங் பரிவாரங்கள், இந்தியாவின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் காரணம் இஸ்லாமியர்கள்தான் என்று கட்டமைத்து வருகின்றன. இதற்குப் பெயர்தான் பாசிசம். அரசுக் கட்டமைப்பையே பாசிச மயமாக்கி வருகின்றனர். மதங்களைக் கடந்து, உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு பாசிஸ்ட்டுகளுக்கு பாடம் கற்பிக்க வேண்டும். அந்தநாள் வெகுதொலைவில் இல்லை.

தொடர்புக்கு: 9500001224

## ...வரலாற்றுப் பார்வை




பின்னர், மாநில வக்ஃபு வாரியங்களை கண்காணிக்கவும், வழிகாட்டவும் ஒன்றிய சிறுபான்மை விவகார அமைச்சகத்தின் கீழ் மத்திய வக்ஃபு கவுன்சில் (Central Waqf Council) 1964 ல் அமைக்கப்பட்டது. இந்தக் கவுன்சிலில் 22 உறுப்பினர்கள் இருப்பார்கள். அனைவரும் இஸ்லாமியர்கள்.

வக்ஃபு சொத்துக்களின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில் 1959, 1964, 1968, 1984 ஆகிய ஆண்டுகளில் வக்ஃபு சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

1995 ல் வக்ஃபு சட்டம் விரிவாக்கப்பட்டு, வக்ஃபு சட்டம் 1995 (Waqf Act, 1995) கொண்டுவரப்பட்டது. வக்ஃபு தீர்ப்பாயங்கள் உருவாக்கப்பட்டன. வக்ஃபு சொத்துக்கள் தொடர்பான விவகாரங்களில் இந்தத் தீர்பாயங்களே இறுதி முடிவெடுக்கும்.

2013 ஆம் ஆண்டு இந்த வக்ஃபு சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதன்படி, முஸ்லிம் சட்ட வல்லுநர் ஒருவர் உட்பட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட வக்ஃபு தீர்ப்பாயங்கள் உருவாக்கப்பட்டன. வக்ஃபு சொத்துக்களின் குத்தகைக் காலம் 3 ஆண்டுகளில் இருந்து 30 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது. ஒவ்வொரு மாநில வக்ஃபு வாரியத்திலும் இரண்டு பெண் உறுப்பினர்கள் இடம்பெறும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது.

இந்நிலையில், வக்ஃபு சட்டத்தில் 40 திருத்தங்கள் செய்யப்பட்டு, வக்ஃபு சட்ட திருத்த மசோதா 2025 நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு இடையே மோடி அரசு நிறைவேற்றியுள்ளது.

## சட்டப் பிரிவு 26 என்ன சொல்கிறது?

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 26 மத விவகாரங்களை நிர்வகிப்பதற்கான சுதந்திரம் பற்றியதாகும்.

26 (a) மத மற்றும் தொண்டு நோக்கங்களுக்காக அமைப்புகளை நிறுவி அவற்றைப் பராமரிக்கவும்,

26 (b) மத விஷயங்களில் அதன் சொந்த விவகாரங்களை நிர்வகிக்கவும்,

26 (c) அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை சொந்தமாக வைத்திருக்கவும், வாங்கவும்

26 (d) சட்டத்தின்படி அத்தகைய சொத்தை நிர்வகிக்கவும் ஒவ்வொரு மதத்துக்கும் சுதந்திரம் அளிக்கப்படுகிறது.

இந்தச் சட்டப்பிரிவின் படி, பொது ஒழுங்கையோ குடிமக்களையோ பாதிக்காவிட்டால், மத சுதந்திரத்தில் அரசு தலையிட முடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 26 பிரிவுக்கு எதிராக, இந்த சட்டம் அளித்திருக்கும் மத சுதந்திரத்தைப் புறந்தள்ளிவிட்டு, வக்ஃபு சொத்துகளின் நிர்வாகத்தை மேம்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல் என்ற பெயரில் அரசு அதிகாரம் விரிவாக்கப்படுகிறது. இது இஸ்லாமியர்களுக்கு எதிரானது. அரசியலமைப்புச் சட்டத்திற்கும் அது அளிக்கும் மத சுதந்திரத்துக்கும் எதிரானது. வகுப்புவெறி பாசிசப் போக்கு என எதிர்க்கட்சிகள் சாடுகின்றன.

# நீட் விலக்கு சட்ட மசோதா இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் டி.இராமச்சந்திரன் பேச்சு

நீட் விலக்கு சட்ட மசோதா குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டமன்றக் குழு தலைவர் தி.ராமச்சந்திரன் கருத்து தெரிவித்தார்.

மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வு, நீட் மட்டுமல்ல எந்த ஒரு உயர் கல்விக்கும் நுழைவுத் தேர்வு கூடாது என்பதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு.

தமிழ்நாடு சமூக நீதியின் ஆணிவேராக திகழ்கிறது. சமூக நீதியின் ஆணிவேரில் வெந்நீரை ஊற்றுவது போல ஒன்றிய அரசு இளங்கலை மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் நீட்டைத் திணித்திருப்பதால் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவக் கல்வி கனவு சிதைந்து போயிருக்கிறது.

தமிழ்நாடு அரசு ஓய்வு பெற்ற நீதி அரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு வேண்டுமென்று சட்டப்பேரவையில் 2 முறை சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைத்து ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்து கடந்த பல மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டிருப்பது தமிழக மக்களையும் அரசியல் சாசனச் சட்டத்தையும் அவமதிக்கும் செயலாகும்.

கல்வி ஒத்திசைவுப் பட்டியலில் இருக்கும் பொழுது ஒன்றிய அரசு மாநில அரசுடன் கலந்து ஆலோசிக்காமல் நீட் தேர்வைத் திணிப்பது மாநில சுயாட்சிக்கும், கூட்டாட்சிக்கும் நேர் எதிரானது. இந்திய மாநிலங்களில் தமிழ்நாட்டில் தான் மாவட்டம் தோறும் மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அகில இந்திய அளவில் நீட் கலந்தாய்வினால் தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இடங்கள் பறிபோகின்றன.

நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பினால் பாதிக்கப்படுகின்ற மாநில முதலமைச்சர்களின் கூட்டுக் குழுவைத் தங்களுடைய தலைமையில் ஒருங்கிணைத்ததைப் போல, நீட் தேர்விற்கு எதிரான மாநில முதல்வர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒன்றிணைக்க வேண்டும்.

கல்வி ஒத்திசைவுப்பட்டியலில்(concurrent list) இருப்பதால் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவப் படிப்பிற்கான சேர்க்கையை நடைமுறைப்படுத்தும் வகையில் சட்ட மசோதாவை நிறைவேற்ற வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒன்றிணைத்துத் தங்கள் தலைமையில் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

சட்ட வல்லுனர்களைக் கலந்து ஆலோசித்துச் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சமூக நீதியை நிலைநாட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற அனைத்து விதமான நடவடிக்கைகளுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதுணையாக இருக்கும்.

# காரல் மார்க்ஸ் சிலை: முதல்வர் அறிவிப்புக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நன்றி

உலகப் புகழ்பெற்ற பேரறிவாளர் காரல் மார்க்ஸ் அவர்களுக்கு தலைநகர் சென்னையில் சிலை அமைக்கப்படும் என 03.04.2025 அன்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் அறிவித்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

“இதுவரை இந்த உலகம் பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் பல்வேறு வகைகளில், கோணங்களில் இந்த உலகத்தைப் பற்றி வியாக்கியானம் செய்துள்ளனர். ஆனால், நம் முன் உள்ள பிரச்சினை இந்த உலகை எப்படி மாற்றியமைப்பது என்பதுதான்” என்ற புரட்சிகரக் கருத்தை முன்வைத்து, அதற்குச் செயல் வடிவம் காண வாழ்நாள் முழுவதும் போராடியவர்.

1848 பிப்ரவரி மாதம் அவரது இணையற்ற தோழர் பிரெடெரிக் ஏங்கல்ஸ்சுடன் இணைந்து, கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியிட்டு, சமூக வாழ்வில் “புதுமை படைக்கும் பொதுமைச் சமூகம் காண உலகத் தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள்” என்று அறைகூவி அழைத்தவர்.

சமூகப் பொருள் உற்பத்தி, விநியோகம் போன்றவைகளை ஆழ்ந்து ஆய்வு செய்து ‘மூலதனம்’ என்ற பெருநூலைச் சமூகப் புரட்சியாளர்களுக்கு ஆயுதமாக வழங்கியவர். காரல் மார்க்சின் நிகரற்ற தத்துவத்தைப் பழுதறக் கற்று, மாமேதை லெனின் தலைமையில் பொதுவுடைமை இயக்கம் யுகப்புரட்சி கண்டு புதிய சகாப்தத்தைத் தொடக்கி வைத்துள்ளது.

மாறி வரும் உலகில் மகத்தான புதுமை படைக்கும் உயிராற்றல் கொண்ட சமூக விஞ்ஞானத்தைப் படைத்து, வழங்கிய ஈடு இணையற்ற பேரறிவாளர் காரல் மார்க்ஸ் அவர்களுக்கு, தமிழ்நாட்டின் தலைநகர் சென்னைப் பெருநகரில் சிலை அமைக்கும் தமிழ்நாடு அரசின் முடிவும், முதலமைச்சர் அறிவிப்பும் வரலாற்றில் என்றென்றும் ஒளிர்ந்து நிற்கும் இந்த முடிவை அறிவித்த முதலமைச்சருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு நன்றி பாராட்டி, வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சென்னையில் காரல் மார்க்ஸ் சிலை

## தமிழ்நாடு அரசுக்கு டி.ராஜா நன்றி

சென்னையில் பேராசான் காரல் மார்க்ஸ் சிலை நிறுவப்படும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விடுத்த அறிவிப்புக்கு நன்றி தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா ஏப்ரல் ஐந்தாம் தேதி அன்று கடிதம் எழுதியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு:



சென்னையில் கார்ல் மார்க்ஸ் சிலையை நிறுவ முடிவு செய்ததற்ககாக, உங்களுக்கும், திமுக அரசுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகை விளக்கியது மட்டுமல்லாமல், அதை மாற்றுவதற்கான வழியையும் காட்டிய உலகின் மிகவும் புகழ்மிக்க தத்துவஞானிகளில் ஒருவருக்குச் செலுத்தப்படும் இந்த அஞ்சலி, நீதி, சமத்துவம் மற்றும் பகுத்தறிவு மீதான தமிழ்நாட்டின் ஆழமான வேரூன்றிய உறுதிப்பாட்டை பெருமையுடன் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. மனிதம் நிரம்பிய உலகத்தை வார்த்தெடுப்பதற்கான போராட்டங்களுக்கு, காரல் மார்க்ஸ் வழிகாட்டுகிறார். அதுதான் அவர் அரசியல் பொருளாதாரத்திற்கு அளித்த மாபெரும் கொடையாகும். வர்க்கப் பிரிவுகளிலிருந்து விடுபட்டு, ஒற்றுமையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற அவரது தொலைநோக்குப் பார்வை தலைமுறைகளுக்கு உத்வேகமூட்டும். மார்க்ஸைப் போற்றுவதன் மூலம், உங்கள் அரசாங்கம் ஒரு தத்துவஞானியை மட்டுமல்ல, சமத்துவத்தையும், கட்டுகளிலிருந்து கூட்டாக விடுவித்துக் கொண்டு விடுதலை பெறுவதற்கான காலத்தால் அழியாத கொள்கைகளையும் கௌரவிக்கிறது.

தமிழ்நாடு இந்த இலட்சியங்களை வளர்த்துள்ளது. இந்தியாவில் முதல் மே தினத்தை ஏற்பாடு செய்த தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் தோழர் சிங்காரவேலர் முதல், மார்க்சியச் சிந்தனையைத் தமிழ் அடையாளம் மற்றும் சமூகச் சீர்திருத்தத்துடன் இணைத்த தோழர் பி.ஜீவானந்தம் வரை மாநிலத்தில் மார்க்சிய இயக்கம் எப்போதும் திராவிட இயக்கத்துடன் கைகோர்த்து நடந்து வந்துள்ளது. ஜீவானந்தம் ஒருமுறை கூறியது போல், “நாங்கள் உணவுக்காகவும் கூலிக்காகவும் மட்டும் போராடவில்லை. கண்ணியம், சுயமரியாதை மற்றும் மூடநம்பிக்கையிலிருந்து விடுவிப்பதற்காகவும் நாங்கள் போராடுகிறோம்.” இது மார்க்சிய மற்றும் திராவிடச் சித்தாந்தங்களின் பகிரப்பட்ட தார்மீக மற்றும் அரசியல் திசை வழியை மிகச்சரியாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் கருணாநிதி போன்ற தலைவர்கள் சாதி, மூடநம்பிக்கை மற்றும் சமூகச் சமத்துவமின்மையை எதிர்கொண்டு தீர்வு காண்பதற்கு, கம்யூனிஸ்டுகளுடன் இணக்கமாகச் சேர்ந்து இயங்குவதற்கான தளத்தைக் கண்டறிந்தனர். இந்த ஒற்றுமையும், தொலைநோக்குப் பார்வையும், தமிழ்நாட்டின் நீடித்த முற்போக்குத் தன்மைக்கு, பகுத்தறிவுக்கு, மனிதநேயத்துக்கு அடிநாதமாய் அமைந்துள்ளன

நமது சமூகத்தைப் பிளந்து எதிரெதிராய் நிறுத்தவும், வரலாற்றைத் திரித்து, நமது தீய நோக்கங்களை நுழைத்து மீண்டும் எழுதவும் பிளவுவாத சக்திகள் முயல்கிற காலகட்டத்தில், மார்க்ஸுக்கு சிலை அமைக்கும், உங்கள் முடிவு ஒற்றுமை, நீதி மற்றும் மார்க்சிய மற்றும் திராவிடச் சித்தாந்தங்களுக்கு இடையிலான கூட்டுவாழ்வை, உறவை மீண்டும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சமத்துவத்திற்கான பாதை வெறுப்பின் மீது அல்ல, போராட்டங்கள் மற்றும் பொதுவான கனவுகளின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை நினைவூட்டும் வகையில், ஒற்றுமையின் நீடித்த அடையாளமாக கார்ல் மார்க்ஸின் சிலை செயல்படும். இந்தச் சிலை வெறும் ஒரு சின்னமாக மட்டுமல்லாமல், வர்க்கச் சுரண்டல், சாதிப் பாகுபாடு மற்றும் ஆணாதிக்க அடிமைத்தனத்திற்கு எதிரான நமது பொதுவான போராட்டத்திற்கு ஒரு உத்வேகமாகவும் அமையட்டும். இந்த நடவடிக்கைக்காக உங்கள் தலைமையை மீண்டும் ஒருமுறை பாராட்டுகிறேன்.

# கச்சத்தீவு, தனித் தீர்மானம்: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

## சட்டப்பேரரவயில் டி.இராமச்சந்திரன் பேச்சு

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும், சித்திரவதைக்கு உள்ளாவதுஎனத் தொடர் பிரச்சினைகளைச் சந்தித்துவரும் தமிழக மீனவர்களைக் காக்க கச்சத்தீவு மீட்பு குறித்து சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தனித் தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

கச்சத்தீவு என்பது ராமநாதபுரம் சேதுபதி மன்னர் வசம் இருந்தது. 1905 ஆம் ஆண்டு ராமநாதபுரம் மீனவர் ஒருவர் புனித அந்தோணியார் ஆலயம் கட்டி ஆண்டுதோறும் அங்கே திருவிழா நடத்தி வந்தார். 1952 ஆம் ஆண்டு இலங்கை கச்சத்தீவைச் சொந்தம் கொண்டாடியது. 1974 ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் அன்றைய இலங்கை அதிபர் சிறிமாவோ பண்டாரநாயக்கே அவர்களாலும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமை, வலைகளை உலர்த்திக் கொள்கின்ற உரிமை, அந்தோனியார் ஆலயத்திற்குச் செல்கின்ற உரிமை ஆகியவை ஏற்படுத்தப்பட்டன.

அதன் பிறகு 1976 ஆம் ஆண்டு இரண்டு நாடுகளின் வெளியுறவுத்துறை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு மீன் பிடி உரிமை மறுக்கப்பட்டு ஆலயத்திற்கு மட்டும் சென்று வருகின்ற உரிமை இடம்பெற்றது. எனவே, இந்திய நாட்டின் நாடாளுமன்ற ஒப்புதலோ அல்லது தமிழ்நாட்டின் சட்டமன்ற ஒப்புதலோ இல்லாமல் நிறைவேற்றப்பட்ட அந்த ஒப்பந்தமானது செல்லத்தக்கதல்ல என்று சட்ட நிபுணர்கள் சொல்கிறார்கள்.

மேலும் கடந்த 1983 ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கையில் இனக் கலவரம் ஏற்பட்டு 2012 வரை கச்சத்தீவில் அந்த திருவிழா நடைபெறவில்லை. அதன் பிறகு நம்முடைய தமிழக மீனவர்கள் அந்தத் திருவிழாவில் பங்கேற்று வந்த வேளையில் கச்சத்தீவைச் சுற்றி மீன்பிடிக்கும்போது இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து சிறை பிடிக்கப்படுவதும் படகுகள் சேதப்படுத்தப்படுவதும் தொடர் நிகழ்வுகளாக இருக்கின்றன.


பாரதிய ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த 10 ஆண்டு காலத்தில் இலங்கை ராணுவம் 3656 மீனவர்களைக் கைது செய்திருக்கிறது, 611 படகுகளைப் பறிமுதல் செய்திருக்கிறது, 736 முறை தாக்குதல் நடத்தியிருக்கிறது. ஒன்றிய அரசு தமிழக மீனவர்களை இந்திய மீனவர்களாகக் கருதவில்லை, தமிழ்நாடு என்பது இந்திய நாட்டிலுள்ள ஒரு மாநிலம்தான். ஆகவேதான் நம்முடைய பாரத பிரதமர் அவர்கள் தற்போது இலங்கைக்கு அரசு முறை பயணம் மேற்கொள்ள உள்ள இந்த வேளையில் தமிழக மீனவர்களையும், படகுகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் கச்சத்தீவை மீட்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மீனவர்கள் நலன் கருதி கொண்டு வந்துள்ள இந்த அரசினர் தனித் தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று ஆதரிக்கிறேன்.

தளி சட்டமன்றத் தொகுதியில் வனப்பகுதியை ஒட்டி இரும்பு வட கம்பி வேலி அமைக்கக் கோரியும், யானைகள் தாக்கி உயிரிழப்பவர்களுக்கு ரூ.25 இலட்சம் நிவாரண நிதி வழங்கிக் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கக் கோரியும், வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கக் கோரியும் சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் அவர்கள் சட்டப்பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

சட்டப்பேரவை விதி 110 ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலக மாமேதை கார்ல் மார்க்ஸ் மற்றும் சமூகப் போராளி மூக்கையா தேவர் அவர்களுக்கும் திருவுருவச் சிலை நிறுவப்படும் என்ற அறிவிப்பை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

சுரண்டும் வர்க்கத்திற்கு எதிராக உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள் என்று உலகத் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடியவர் உலக மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்கள். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியில் இருந்தபோது அனைத்து உலக நாடுகளும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணத் தேடிய ஒரே புத்தகம் கார்ல் மார்க்ஸ் எழுதிய Das Capital புத்தகம், அத்தகைய பொதுவுடைமைப் போராளி கார்ல் மார்க்ஸ் அவர்களுடைய நூற்றாண்டை ஒட்டி அவருக்கு சென்னையில் சிலை அமைக்கப்படும் என்று அறிவிப்பும் மேலும் சமூகப் போராளியான தேவர் திருமகனாரின் நம்பிக்கை பெற்று 4 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் 1 முறை நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய மூக்கையா தேவர் அவர்களுக்கு மதுரை உசிலம்பட்டியில் மணி மண்டபம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினையும் அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வீடு சேராத வெள்ளாமை



### காட்சி 1

**டாடி:** யார் பேசுறது?

**ஏடி:** நீதான போன் பண்ணுன? என்னை யாருன்னு கேட்டா? எடக்கு பண்றியா? யார்யா நீ?

**டாடி:** என்ன, நான் யாருன்னு உனக்கு தெரியலையா?

**ஏடி:** (குரல் அறிந்து) ஐயா, ஐயா, நீங்களாங்கய்யா! என்ன மன்னிச்சிடுங்க ஐயா, டிவி பாத்துட்டு இருந்தேன். அந்தச் சத்தத்தில் புரியாமல் போ யிட்டுதுங்க. மன்னிச்சுக்கோங்க ஐயா. மன்னிச்சிடுங்க. சொல்லுங்க ஐயா.

**டாடி:** போன்ல சொல்ல முடியாது, உடனே புறப்பட்டு இங்க வா.

**ஏடி:** வர்றேங்கய்யா. எங்க வரணும்?

**டாடி:** என்னது, எங்க வரணுமா? எங்க இருக்கேன்னு உனக்கு தெரியாதா?

**ஏடி:** ஐயா தெரியாம கேட்டுட்டேங்க ஐயா, மன்னிச்சுக்குங்க ஐயா. உடனே வந்துர்ரேங்கையா!

**டாடி:** எப்ப வர்ற?

**ஏடி:** உடனே வந்துரவாங்கையா!?

**டாடி:** என்னமோ உங்க ஊர்ல கூட்டம் நடக்குதாமே. நீ அங்க போறியாமே. இங்க வந்துருவியா?

**ஏடி:** அது கிடக்குதுங்கையா கூட்டம். உங்களை விடவா கூட்டம் முக்கியம். இப்பவே கிளம்பிட்டேனுங்க ஐயா!

(சில மணி நேரங்கள் கழித்து)

**ஏடி:** ஐயா வீட்டுக்கு பக்கத்துல வந்துட்டேனுங்கையா. எப்ப வந்தா பாக்கலாம்ங்கையா?

**டாடி:** ராத்திரி எட்டு மணிக்கு வா!

**ஏடி:** சரிங்கய்யா. வந்துறேனுங்கய்யா!

**டாடி:** சரி. சரி. யார் யார் வந்திருக்கீங்க?

**ஏடி:** நான் மட்டும் தானுங்கய்யா வந்திருக்கேன். என்னைத் தானே வரச் சொன்னீங்கய்யா!

**டாடி:** ஒவ்வொருத்தனையா அழைக்கணுமோ? நீ மட்டும் வந்து என்ன பேசப் போற? உன் கூடயே சுத்திறவனுங்களையும் கூட்டிட்டு வரலையா?

**ஏடி:** ஆருங்கய்யா, அந்த மணி, தம்பு மோகன், சாமி இவங்களாங்கய்யா?

**டாடி:** அவனுகளையும் வரச் சொல்லு. அவய்ங்க உன் கூட மட்டுமா பேசுறாய்ங்க, என்கூடயும் தான் பேசிட்டு இருக்கானுக.

**ஏடி:** சரிங்கய்யா, சரிங்கய்யா, எப்படினாலும் கூட்டிட்டு வந்துடறேங்கய்யா!

**டாடி:** அதுக்குள்ள வந்துருவானுகளா?

**ஏடி:** உங்க பேர சொன்னா போதுங்கையா. தலை தெறிக்க ஓடி வந்துருவானுங்க!

**டாடி:** சரி, சரி. எல்லாத்தையும் கூட்டிகிட்டு ராத்திரி ஒன்பது மணிக்கு வந்து சேரு! வந்தா மட்டும் பத்தாது. நான் சொல்றத கேட்கணும்.

**ஏடி:** புரியுதுங்கய்யா. நீங்க சொல்றத மீறமாட்டோம்ங்கய்யா!

**டாடி:** அப்படித்தான் சொல்லுவ. ஆனா அப்புறம் மாறுவ. என்ன நான் சொல்றது?

**ஏடி:** ஏதோ நடந்ததை மன்னிச்சுக்கோங்க ஐயா. இனிமே அப்படி எல்லாம் நடக்காது எஜமான்!

### காட்சி 2

**காவலாளி:** ஆப் கோன் ஹே? தும் கிஸ்தராகே கிரோ கே சாத் ஆயே ஹோ?

**ஏடி:** அப்படின்னா?

**காவலாளி:** யாரு நீங்கெல்லாம்? எதுக்கு கும்பலா வந்து இருக்கீங்க?

**ஏடி:** எஜமான் வரச் சொன்னாங்க. அதுக்குத் தான் வந்திருக்கோம்!

**காவலாளி:** கூட வந்த அல்லக்கை எல்லாம் அந்த பக்கமா உட்காருங்க. இந்த அஞ்சு பேர் மட்டும் உள்ள போங்க!

(இரண்டரை மணி நேரம் கழித்து கவலையும் சோகமும் அப்பிய முகங்களோடு வெளியே வருகிறார்கள்)

**அல்லக்கைகள்:** என்ன இவ்வளவு நேரமாயிடுச்சு? ஏதும் திட்டி விட்டாரா?

**ஏடி:** அதெல்லாம் ஒன்னும் இல்லைப்பா. எஜமானுக்கு போர் அடிச்ச தாம். அதான் கிச்சுகிச்சு மூட்டி விளையாடிகிட்டு இருந்தாரு. நம்ம ஊர்ல பிள்ளையார் கோவில் கட்டி கும்பாபிஷேகம் பண்ணனும்னு சொல்லிருக்காரப்பா!

**காவலாளி:** (வந்த பெண்ணை பார்த்து) அம்மணி உங்களை எஜமான் கூப்பிட்டாருங்க.

(அம்மினி, அறைக்குள்ளே சென்றதும்)

**டாடி:** இந்தப் பயலுக சரி இல்ல. வழுக்கி வழுக்கி பேசுறானுக. கோட்டையன சட்டுனு வரச் சொல்லு அம்மினி.

(அம்மினி போனில் பேசுகிறார். உடனே கோட்டையன் கொல்லைப்புற வழியாக, யாரும் பார்க்காமல் உள்ளே நுழைந்து, டாடி முன்னே கைகட்டி, வாய் பொத்தி நிற்கிறார்)

**டாடி:** அந்த ஏடியும் அவங்க ஆட்களும் சரிப்பட்டு வர்ற மாதிரி தெரியல. பேசாம அவனுங்கள வீட்டுக்கு அனுப்பிவிட்டு, உனக்கு அதிகாரம் கொடுக்கலாம்னு பார்க்கிறேன்! என்ன சொல்ற?

**கோட்டையன்:** எஜமான், எது சொன்னாலும் சரிங்க. சொல்றத செய்யறேனுங்க ஐயா!

**டாடி:** சரி சரி ஊருக்கு போயி, ஓரம் சாரமா ஒதுங்கி நிக்கிறவங்கள எல்லாம் ஒன்னாக்கிறியா? ஒரு வருஷம் கூட இல்லை. கும்பாபிஷேகம் நடத்தியே தீரணும்!

**கோட்டையன்:** அதெல்லாம் செஞ் சிரலாங்கய்யா. உங்க வார்த்தையை மீறி அவங்க எங்க போகப் போறாங்க? ஆனா புள்ளையார் புடிக்க சொல்றீங்க ஐயா! அது குரங்கா போச்சுன்னா என்ன பண்றதுங்க?

**டாடி:** (கோபத்தில் கண்கள் சிவக்க) அதிக பிரசங்கித்தனம் இங்க பண்ணக்கூடாது. சொன்னதை மட்டும் செய்யணும். புரிஞ்சுதா?

**கோட்டையன்:** அய்யய்யோ. இனி ஒரு வார்த்தை பேச மாட்டேனுங்க எஜமான்! நீங்க சொல்றது பளிங்கு கல்லு மாதிரி தெளிவா புரியுதுங்க. பிசிர் இல்லாமல் செஞ்சிடலாங்கய்யா! கும்பிடுறேனுங்க! போயிட்டு வாரணுங்க.

**டாடி:** சரி, சரி போ. ஏய், சாப்புட்டுட்டு போ.

### காட்சி 3

**டாடி:** அம்மிணி, போன் போட்டு அந்த அரைகுறைய வரச் சொல்லு.

**அம்மினி:** அதை ஏன் கூப்பிட்டு அனாவசியமா நேரத்தை வீணாக்குறீங்க?

**டாடி:** செய்யறத சரியா செஞ்சிரணும். உடனே வரச் சொல்லு!

(அரைகுறை பவ்வியமாக அறைக்குள் நுழைகிறார்)

**டாடி:** அங்க நீ என்னப்பா பண்ணிக்கிட்டு இருக்க?

**அரைகுறை:** அதெல்லாம் ஆடு மாடு மேயாம பயிர நல்லா பாத்துகிட்டு இருக்கேங்க!

**டாடி:** பார்த்து கிழிச்ச! உன்னைய நம்பி விட்டதுனால, வெள்ளாம தான் பாழாப்போச்சு! உனக்குக் கொடுத்த சம்பளம், பண்ணுன செலவு எல்லாம் வீணா, தண்டமாப் போயிருச்சு!

**அரைகுறை:** அப்படி எல்லாம் இல்லீங்க. பத்திரமா பாத்துகிட்டுதாங்கய்யா இருக்கேன்.

**டாடி:** பார்த்தேன், பார்த்தேன். மத்தவன அடிக்கச் சொன்னா, நீ உன்னையவே கயிறைச் சுத்தி அடிச்சிக்குற! அவ்வளவு கஷ்டப்பட்டு, பணத்தைத் தண்ணியா இறைச்சு, விளைஞ்ச பயிரில ஒத்த நெல்லு மணி வீட்டுக்கு வந்துச்சா! எனக்கு மேல ஒருத்தர் இருக்காரு இல்ல! அவர்கிட்ட நான் என்ன பதில் சொல்றது?

**அரைகுறை:** அப்படி எல்லாம் இல்லைங்கய்யா. இன்னும் ஒரு வாய்ப்பு கொடுங்க, மூட்டை மூட்டையா லாரில ஏத்திக் கொண்டு வந்துடறேன்.

**டாடி:** வாய மூடு! உன்ன நம்பி பத்து பைசா பிரயோஜனம் இல்லை. வேற ஆள போடச் சொல்லி பெரியவர் சொல்லிட்டாரு. நானும் முடிவு பண்ணிட்டேன்.

**அரைகுறை:** அப்படி எதுவும் செஞ்சுறாதீங்க எஜமான். எவ்வளவு விசுவாசமா உடுப்பை எல்லாம் கழட்டி போட்டுட்டு, உங்கள நம்பி வந்தேன்! என்ன கை கழுவி விட்டுடாதீங்க. கால்ல விழுறேன் சாமி.

**டாடி:** பல வெள்ளாம பார்த்தாச்சுப்பா! நீயே வேரப் புடுங்கி விட்டுர்ற! இனி உன்னை நம்ப முடியாது. மரியாதையா சொல்றத கேளு.

**அரைகுறை:** ரெண்டு பேரும் முடிவு பண்ணிட்டீங்கன்னா அதுக்கு மேல அப்பீல் எது? எனக்கு வேற ஏதாச்சும் வழி பண்ணுங்க. கும்பிடுறேங்க. போய்ட்டு வாரனுங்க!

(சோகமாய் இசை ஒலிக்க, பின்னணிக் குரல்:

மேனேஜர் இல்லை லீடர்னு வசனம் பேசினாலும், டேமேஜாயி போனா டிஜிபியா ஆக முடியும்)

திரை விழுகிறது

**கிராமத்தான்**

# தமிழகம் முழுவதும் வைப்பு நிதி அலுவலகங்கள் முன்பாக அனைத்துத் தொழிற்சங்கம் ஆர்ப்பாட்டம்






தொழிலாளர்கள் கொடுக்கும் பங்குத் தொகையில் இயங்கி வரும் வைப்பு நிதி அலுவலகங்கள், தொழிலாளர் பிரச்சனைகளுக்கு நியாயமான பதில் சொல்லாமல் இழுத்தடிப்பதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வருங்கால வைப்பு நிதி பயனாளிகள் கணக்கு எண், கணக்கு சரிபார்ப்பது, குடும்ப ஓய்வூதியர், வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியதாரர் அவர்களுக்கு உயர்த்தப்பட்ட (பிவீரீலீமீகூஷீ ஜீமீஸீஉவீஷீஸீ) ஓய்வூதியம் தொடர்பாகப் பயனாளிகளை அலைக்கழிக்கும் போக்கைக் கைவிடவும் பயனாளிகள் நலன்களைப் பாதுகாக்கவும் உள்ளிட்ட இபிஎஃப் நிர்வாகத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து, சென்னையில் ராயப்பேட்டை, திருச்சி, திருநெல்வேலி இபிஎஃப் மண்டல அலுவலகங்கள் முன்பு ஏப்ரல் 8 ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தி, கோரிக்கை மனு தரப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி தேசியச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, தொமுச தலைவர் கி.நடராஜன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். மண்டல இயக்குனர் மணீஸ் அக்னி கோத்ரி அவர்களிடம் அனைத்துச் சங்க தலைவர்கள் கோரிக்கை மனு அளித்துப் பேசினர். அரசின் கொள்கை முடிவுகளுக்கான கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பி வைப்பதாவும், நிலுவையில் உள்ள கோப்புகளை விரைவில் தீர்வு செய்திடுவது உள்ளிட்ட தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து அவ்வப்போது தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசுவதாக உறுதியளித்தார்.

மேலும் வருங்கால வைப்பு நிதி அலுவலர் சங்க நிர்வாகிகளும், மத்தியத் தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளும் விவாதித்துத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்து. இதில் தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர்கள் மு.சம்பத், அ.அருள், எம்.ஜஹாங்கீர், மயில்வாகனன் உட்பட அனைத்துத் தொழிற்சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

திருச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தொமுச பேரவை குணசேகரன் தலைமை தாங்கினார். ஏஐடியுசி க.சுரேஷ், சிஐடியூ ரங்கராஜன், எச்எம்எஸ் ஜான்சன், ஏஐசிசிடியூ ஞான தேசிகன், யூடியூசி சிவசெல்வம், ஐஎன்டியூசி மணிராஜ் உள்ளிட்டவர் உரையாற்றினர். திருச்சி மண்டல ஆணையர் வருங்கால வைப்பு நிதி அதிகாரிகள் கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்டனர்.

திருநெல்வேலியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தொமுச தர்மன் தலைமை வகித்தார். ஏஐடியுசி ஆர்.சடையப்பன், ரெங்கன், ஏஐசிசிடியு கணேசன், எச்எம்எஸ் சுப்ரமணியன், ஐஎன்டியுசி உமாபதி சிவன் உள்ளிட்டோர் பேசினர்.

நாகர்கோவில் மண்டல அலுவலகத்தில் கோரிக்கை மனு அளிக்கச் சென்ற தலைவர்களை உள்ளே அனுமதிக்காததால் மனுவினைப் பெறும்வரை உள்ளிருப்புப் போராட்டம் நடைபெற்றது. பேச்சுவார்த்தைக்குப் பின் மனு வாங்கப்பட்டது.

## நூல் வெளியீடு




சத்தியமங்கலத்தில் 27.3.25 அன்று, தா.சந்திரன் தொகுத்த லெனினிடம் கற்போம் நூலை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட, மாநிலச் துணைச் செயலாளர் நா.பெரியசாமி பெற்றுக் கொண்டார்.

## கட்சி நூற்றாண்டு பேரவைக் கூட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சூலூர் தெற்கு வட்டாரக் குழுவின் சார்பில், கட்சியின் நூற்றாண்டு பேரவைக் கூட்டம் 30.04.2025 அன்று கண்ணம்பாளையம் பாலன் இல்லத்தில் வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார் தலைமையில், வட்டார துணைச் செயலாளர் வீ.பேரின்பம் வரவேற்புரையாற்றினார்.

கட்சியின் வரலாறு குறித்து மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர், கட்சி செய்த சாதனைகள் மற்றும் இன்றைய அரசியல் சூழல் குறித்தும் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.எம்.செல்வராஜ், மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி ஆகியோர் உரையாற்றினார். வட்டாரப் பொருளாளர் கே.கண்ணன் நன்றி கூறினார்.

## அரியலூர் நகராட்சி சுகாதாரத் தொழிலாளர் சங்கம் வேலை நிறுத்தம் செய்ய முடிவு



அரியலூர் நகராட்சியில் பணி புரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்தத் துப்புரவு தொழிலாளர்களின் கூட்டத்தைச் சங்கச் செயலாளர் ரெ.நல்லுசாமி துவக்கி வைத்தார். ஏஐடியுசி உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளன மாநிலச் செயலாளர் டி.தண்டபாணி கலந்து கொண்டார்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் படி நிர்ணயம் செய்துள்ள ஊதியமான அடிப்படைச் சம்பளம் ரூ.10 ஆயிரம் மற்றும் அகவிலைப்படி ரூ.6593 சேர்த்து ஊதியமாக ரூ.16,593ஐ நகராட்சியில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதை, நகராட்சி ஆணையர் உறுதிப்படுத்திட வேண்டும்.

கோரிக்கைகள் நிறைவேற்றிட முன்வராத போக்கு தொடருமானால் விரைவில் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது தீர்மானிக்கப்பட்டது.

## உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி



திருப்பூர் மாநகர் 17வது வார்டு நெசவாளர் காலனி பகுதியில், 20 சுமைப்பணி தொழிலாளர்கள் ஏஐடியூசி சங்கத்தில் இணைந்தனர். நிகழ்வில் இரண்டாவது மண்டலக் குழு செயலாளர் வி.எஸ். சசிகுமார், ஜெனரல் சங்கப் பொதுச் செயலாளர் ஜி.ரவி. மண்டலத் துணைச் செயலாளர் எஸ்.விஜய், ஏஐடியுசி மாவட்டக் குழு உறுப்பினர் ஆறுமுகம், சிபிஐ திருமலை நகர் கிளைச் செயலாளர் சங்கர், மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு புதிதாக இணைந்த தோழர்களுக்கு உறுப்பினர் அட்டையை வழங்கினர்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி



கோவை மாவட்டம், இடிகரையில் மருதுபாண்டி அவர்களின் புதுமனை புகுவிழா 10.3.2025 அன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் மு.வ.கல்யாணசுந்தரம், ஏஐடியூசி டெம்போ சங்க மாவட்ட தலைவர் சி.ஏ.வேலுச்சாமி, மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் விவசாய அணிச் செயலாளர் கே.செல்லக்குட்டி, ஆர்.சசிகுமார் கே.சி.மூர்த்தி ஆகியோரிடத்தில் குடும்பத்தினர் சார்பில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 வழங்கப்பட்டது.

## தூய்மைப் பணியாளர்களின் தொகுப்பூதியத்தை உயர்த்தியதற்கு நன்றி

ஆரம்பச் சுகாதார நிலைய ஆர்சிஎச் தூய்மைப் பணியாளர்களின் மாதத் தொகுப்பூதியத்தை ரூ.1500 லிருந்து, ரூ.5000 மாக உயர்த்திய தமிழ்நாடு அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், ஆரம்ப சுகாதார நிலைய ஆர்சிஎச் ஒப்பந்தத் துப்புரவுப் பணியாளர்கள் நலச் சங்கத்தின், மாநிலப் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு ஏற்கெனவே, இப்பணியாளர்களில் 841 பேருக்குப் பல நோக்கு மருத்துவப் பணியாளர்களாகப் பணிநியமனம் செய்து, மாதத் தொகுப்பூதியம் ரூ.18 ஆயிரம் வழங்கியது போல் வழங்கிட வேண்டும்.

ஆர்சிஎச் தூய்மைப் பணியாளர்கள் சங்கத்தின் மாநில கௌரவத் தலைவர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை 8.04.2025 அன்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து கோரிக்கை மனுவையும், தாங்கள் எழுதிய "தாய்மொழியில் மருத்துவக் கல்வியின் பயன்கள்" என்ற சிறு நூலின் பிரதிகளையும் வழங்கினர். டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் சார்பில், முதலமைச்சர் நிவாரண நிதிக்காக ரூ.2,05,000 க்கான வரைவோலையும் அமைச்சரிடம் வழங்கப்பட்டது.

## மணப்பாறையில் ஏஐடியுசி தபால் அனுப்பும் போராட்டம்



மணப்பாறை மதுரைச் சாலையில் உள்ள நகராட்சி அலுவலகம் முன்பாக, திமுக தேர்தல் அறிக்கையில் தூய்மைப் பணியாளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி, ஏஐடியுசி தபால் அனுப்பும் போராட்டம், உள்ளாட்சித் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது. கட்சியின் நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், போக்குவரத்துக் கழக மண்டலச் செயலாளர் சுந்தர்ராஜ், கிளைச் செயலாளர் மாசிமலை, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் சௌகத் அலி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தமிழகத்தில் ஆணவப் படுகொலையைத் தடுக்க வலியுறுத்தி

## ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் வேலூர் மண்டலம் சார்பில், தலித் மக்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்திட தமிழக அரசை வலியுறுத்தி, வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே மாநிலத் துணைத் தலைவர் ஜி.லதா தலைமையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அகில இந்திய தலித் உரிமைகள் இயக்க தேசியச் செயலர் த.லெனின் கண்டன உரை ஆற்றினார். இதில் மண்டலப் பொறுப்பாளர் எல்.மணி, இந்தியக் குடியரசு கட்சி எ.அசோகன், கேசவன், எம்.ஜீவா, அம்பேத்கர் கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை சி.முனுசாமி, மாவட்ட மக்கள் சேவா சங்கம் ஜி.எம்.முனிரத்தினம், ஆனந்தன், பிரகாசம் உள்ளிட்டோர் பேசினர். இதில் திருப்பத்தூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை மற்றும் வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து தோழர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி 23 வது வார்டில் கோடைகால நீர் மோர் பந்தல் திறப்பு



மனிதம் சமூகப் பணி மையம் – டிரஸ்ட் நடத்தும், 9ஆம் ஆண்டு நீர் மோர் பந்தல் துவக்க விழா, உறையூர் அருணா தியேட்டர் அருகில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்றுச் சிறப்பித்தார். அவருடன் திருச்சி மேயர் மு.அன்பழகன், திமுக மாவட்டச் செயலாளர் வைரமணி, மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், மனிதம் இயக்குனர் தினேஷ் குமார், மனிதம் செயலாளர் நல்லாசிரியர் பிரேம் குமார், பொருளாளர் டாக்டர்.பரமேஸ்வரி, மேலாளர் .ஜாஹிர் உசேன் ஆகியோர் உடன் இருந்தனர். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் சோபியா விமலாராணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் சுமதி, ஜெய்லானி, தர்மா, சூர்யா, துரைராஜ், ஆனந்தன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும்

இந்திய வழக்கறிஞர்கள் சங்க மாவட்டப் பேரவை வலியுறுத்தல்




இந்திய வழக்கறிஞர்கள் சங்க வடசென்னை மாவட்டம் இரண்டாம் ஆண்டு பேரவைக் கூட்டம், மாவட்டத் தலைவர் எம்.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் துணைத் தலைவர் இரா.இராமசாமி வரவேற்புரை ஆற்ற, மாநிலப் பொருளாளர் கே.ஆர்.இராமமூர்த்தி துவக்கவுரை ஆற்றினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ், ஐஏல் மாவட்ட துணைச் செயலாளர் எம்.காவிரிசெல்வம், இந்திய வழக்கறிஞர் சங்க உயர்நீதிமன்ற கிளைச் செயலாளர் மொபின் வாழ்த்துரை வழங்கினர் ஐஏஎல் மாவட்ட துணைச் செயலாளர் இரா.கோட்டி சுரேஷ் நன்றி கூறினார்.

வழக்கறிஞர் சட்டத் திருத்த வரைவு மசோதா 2025ஐ முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும், வழக்கறிஞர்கள் பாதுகாப்புச் சட்டத்தை உடனே இயற்றிட வேண்டும், மூன்று புதிய குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும், வழக்கறிஞர் சேமநல நிதியை ரூ.25 லட்சம் என உயர்த்தி வழங்கிட வேண்டும், உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் வெளிப்படைத் தன்மையோடு கூடிய இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும், உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும், உச்சநீதிமன்ற கிளையினை தமிழ்நாட்டில் நிறுவ வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றிய மாநாடு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றிய 14 வது மாநாடு மக்கள் தலைவர் பெ.தங்கம் நினைவரங்கத்தில், டி.பெருசு, என்.சுந்தரம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் 10 வது வார்டு கவுன்சிலர் மீனாட்சி முனீஸ்வரன் கொடியேற்றினார். ஜனசக்தி பிரபாகரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன் மாநாட்டைத் துவக்கி வைத்தார். மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.தமிழ் பெருமாள், எம்.வி.கல்யாண சுந்தரம் ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினார்கள்.

ஒன்றியச் செயலாளராக பா.பிச்சைமணி, ஒன்றியத் துணைச் செயலாளராக பி.முருகன், ஒன்றியப் பொருளாளர் க.முனீஸ்வரன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாகத் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டச் செயலாளர் கி.பெருமாள் நிறைவுரையாற்றினார்.

## 15வது ஊதிய பேச்சுவார்த்தையைத் தொடங்கிட வலியுறுத்தல்




திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சேவூரில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மண்டலப் பேரவைக் கூட்டம், தலைவர் வே.முத்தையன் தலைமையில், கொடியை ஓய்வு பெற்றோர் நலச் சங்கத்தின் கோ.தங்கவேல் ஏற்றி தொடக்க உரை ஆற்றினார். மாநிலத் துணைத் தலைவர் த.ராசேந்திரன் வரவேற்புரை ஆற்றினார். மண்டலப் பொதுச்செயலாளர் வி.குப்புரங்கன் அறிக்கை முன் வைத்தார்.

இதில் தலைவராக வே.முத்தையன், பொதுச் செயலாளராக வி.குப்புரங்கன், பொருளாளராக வி.விஸ்வநாதன், துணைத் தலைவர்களாக எம்.எஸ்.மாதேஸ்வரன், த.ராசேந்திரன், துணைச் செயலாளர்கள் ஓம் கிருஷ்ணன், டி.வெங்கடேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சம்மேளனத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் எ.முருகராஜ் நிறைவுரை ஆற்றினார்.

15 வது ஊதிய பேச்சுவார்த்தை நடத்தி முடித்திடு, ஓட்டுனர் பணியுடன், நடத்துனர் பணி நியமனத்தை ரத்து செய்திடு, 2003க்குப் பின் பணியில் சேர்ந்தவர்களை பென்ஷன் திட்டத்தில் இணைத்திடு, உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கொக்கிலமேடு மீனவ கிராமத்தின்

## சமூகப் பதற்றத்தைத் தணிக்க ஏஐடியூசி மீனவத் தொழிளர்கள் ஆட்சியரிடம் மனு



செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம் எடையூர் ஊராட்சியில், தலைவர் மற்றும் துணைத் தலைவர், ஊராட்சிப் பணத்தை முறைகேடாகக் கையாடல் செய்தது குறித்து, மீனவர் சங்கத்தின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் பல லட்ச ரூபாய் கையாடல் செய்தது நிரூபிக்கப்பட்டு, இவர்கள் மீது நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியருக்கு நீதிஅரசர் உத்தரவு பிறப்பித்தார். அதனால் மாவட்ட ஆட்சித் தலைவர், இவர்களிடமிருந்து காசோலை பறித்து உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவாக்கிப் பள்ளி மாணவர்கள், பெண்கள், இளைஞர்கள் மீது வழக்கு போட்டு மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் கெடுத்து வருகின்றனர்.

எனவே மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து கிராமத்தில் அமைதி நிலவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனு கொடுக்கப்பட்டது. இதில் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் க.ஜெகதீசன் தலைமையில், சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் சின்னத்தம்பி, ஏஐஓய்எப் மாநில துணைத்தலைவர் மோ.வெங்கடேசன், மீனவர் சங்கத்தின் மாவட்ட தலைவர் சரவணன், துணைத்தலைவர் கனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் ஓய்.ஹாருன் பாஷா உள்ளிட்ட மீனவர் தொழிலாளர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மாநகரில் சிபிஐ புதிய அலுவலகம் திறப்பு விழா

திருப்பூர் மாநகர், 2வது மண்டலம் 30வது வார்டு ராமையா காலனி கிளை சார்பில், அஜாய் கோஷ் மன்றம் புதிய அலுவலகத் திறப்பு விழா, கிளைச் செயலாளர் கருப்புசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், புதிய அலுவலகத்தை மூத்த தோழர் ஜி.காளியப்பன் திறந்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் கொடியேற்றி வைக்க, துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம் கல்வெட்டைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் எம்சி, புறநகர் மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் பி.ஆர்.நடராஜன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் காட்டே சி.ராமசாமி, இரண்டாவது மண்டலக் குழுச் செயலாளர் வி.எஸ்.சசிகுமார், முதல் மண்டலக் குழுச் செயலாளர் எஸ்.செல்வராஜ் எம்சி, மூன்றாவது மண்டலக் குழுச் செயலாளர் எஸ்.செந்தில்குமார், இரண்டாவது மண்டல துணைச் செயலாளர் எஸ்.விஜய், பனியன் சங்கப் பொதுச் செயலாளர் என்.சேகர், மோட்டார் சங்கப் பொதுச் செயலாளர் கே.சுரேஷ்மற்றும் திரளான பொதுமக்களும், தோழர்களும் கலந்துகொண்டனர்.

முன்னதாக கலை இலக்கியப் பெருமன்ற துருவன் பாலா குழுவினரின் மக்கள் இசை பாடல் நிகழ்ச்சியும், நிமிர்வு கலைக்குழுவினரின் சிறப்பான பறை இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் த.பாஸ்கரன் பணி நிறைவு பாராட்டு விழா




தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் த.பாஸ்கரன் அவர்களுக்குப் பணி நிறைவு பாராட்டு விழா, தஞ்சை ஏஐடியுசி அலுவலகத்தில் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட தலைவர் இள.குமணன் தலைமையில், சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் இரா.சத்தியமூர்த்தி, ஏஐடியுசி மாநிலச் செயலாளர் சி.சந்திரகுமார், முன்னாள் மாநில துணைத் தலைவர் தி.திருநாவுக்கரசு, தமிழ்நாடு ஆய்வக உதவியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் இரா.இரவீந்தின், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் இரா.தில்லைவனம், மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்டப் பொருளாளர் தி.கோவிந்தராஜன், வங்கி ஊழியர் சங்கத்தின் க.அன்பழகன், கவிஞர் வல்லம் தாஸ்பால், ஏஐடியுசி தெரு வியாபாரிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். த.பாஸ்கரன் ஏற்புரை ஆற்றினார்.

## ஏஐஓய்எப் சுவர் விளம்பரம்




அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் மு.விஜய், மாவட்டக் குழு உறுப்பினர் எஸ்.ரமேஷ் கண்ணன், புதுக்கோட்டை தாலுகா துணைச் செயலாளர் ஆர்.மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டு புதுக்கோட்டை மாநகராட்சிப் பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட இடங்களில் JOIN AIYF சுவர் விளம்பரம் செய்தனர்.

## வனப்பகுதியில் இறந்த செந்தில் மரணத்திற்கு நீதி விசாரணை வேண்டும்

### ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் வலியுறுத்தல்



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின், தருமபுரி மாவட்ட முதல் அமைப்புக் கூட்டம், சங்க அலுவலகத்தில் குப்பன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநிலச் சிறப்புத் தலைவர் ந.நஞ்சப்பன், மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் மாவட்டத் தலைவராக பழனியப்பன், செயலாளராக சுப்ரமணி, பொருளாளராக காமராஜ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பென்னாகரம் வனப்பகுதியில் மர்மமாக இறந்த செந்தில் மரணத்திற்கு நீதி விசாரணை வேண்டும். மரணத்திற்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இறந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கி, ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் கா.சி.தமிழ்க்குமரன், மாதேஸ்வரன், மாவட்டப் பொருளாளர் சி.மாதையன் மற்றும் மாவட்டக் குழு, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## இலவச வீட்டுமனை பட்டா கேட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்



கோவில்பட்டி போஸ் நகர், சாஸ்திரி நகர் வடக்கு தெருவில் அரசு புறம்போக்கு நிலத்தில், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வரும் மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க வலியுறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்துக்குக் கட்சியின் நகர உதவிச் செயலாளர் முனியசாமி தலைமையில், நகரச் செயலாளர் சரோஜா, மாவட்டக் குழு உறுப்பினர்கள் பரமராஜ், வக்கீல் ரஞ்சனி கண்ணம்மா மற்றும் பகுதி மக்கள் திரளாகக் கலந்து கொண்டு கோஷமிட்டனர். தொடர்ந்து துணை வட்டாட்சியர் திரவியத்திடம் கோரிக்கை மனுவை வழங்கினர்.

இதேபோல், இலுப்பையூரணி ஊராட்சி உட்பட்ட தாமஸ் நகர், மறவர் காலனி, பூரணம்மாள் காலனிப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க வலியுறுத்தி, கட்சியின் தாலுகா செயலாளர் பாபு தலைமையில் கிளைச் செயலாளர்கள் ரஞ்சிதம், பொன்மணி, மாரியப்பன் மற்றும் அப்பகுதி மக்கள் இலுப்பையூரணி கிராம நிர்வாக அலுவலர் செல்வகுமாரிடம் மனு வழங்கினர்.

## இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தருமபுரி மாவட்டக் குழு சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம், மாவட்டச் செயலாளர் எஸ்.கமலாமூர்த்தி தலைமையில், மாவட்ட தலைவர் விஜயா, பொருளாளர் செந்தாமரை நிர்வாகிகள் பேபி, சுகுணா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.


மாநிலச் செயலாளர் கண்ணகி, துணைச் செயலாளர் டி.பி.லலிதா, கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்டச் செய்லாளர் எஸ்.கலைச்செல்வம் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்கள். இறுதியில் மாவட்டப் பொறுப்பாளர் முனியம்மாள் நன்றி கூறினார்.

# இந்திச் சுமையினை இளைஞர் மேல் ஏற்றவேண்டாம்



மே.து.ரா.

**பெரும்பான்மை மக்கள் இந்தி மொழி பேசுவதால் அந்த மொழியினை ஏற்றுக்கொள்வதுதான் முறை என்றும் இது நாட்டுப் பற்றுக்கான அளவீடாகத் திகழ்கிறது என்றும் கூறப்படுவது உண்மையில்லை.**




முதலில் பெரும்பான்மையோர் பேசுகின்ற மொழியாக இந்தி உள்ளது என்பதே தவறானதாகும். இதனையொட்டி, ஒரு மாநிலத்தில் பெரும்பாலான இன மக்கள் பேசுகின்ற மொழியை அந்த மாநிலத்தின் பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் கீழமை நீதிமன்ற மொழியாகவும் கல்வி மொழியாகவும் இன்ன பிற பயன்பாடுகளின் மொழியாகவும் ஏற்றுக்கொள்வதில் பிறருக்குத் தயக்கம் இருப்பதில்லை. ஆனால், இந்திய ஒன்றியத்தில் மிகுதியானோரால் இந்தி பேசப்படுவதால், அதனை ஏற்றுக்கொள்வதுதான் முறையானதாக அமையும் என்பதும் பொருந்தாத ஒப்பீடாகும்.

இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டோர் 43.63% மட்டுமே என்று 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கூறுகிறது. மைதிலி, பேசுப்புரி, மகாகி (பீகார்), விரசு, அவதி, கனோசி (உ.பி.), புந்தேல்கண்டி (ம.பி), சூரசேனி (குசராத்), அரியானாவி (அரியானா) போன்ற பல மொழிகளை இந்தி உள்வாங்கிக் கொண்டது. இதனால்தான், இந்தி மொழி பேசுவோரின் அளவு கூடியுள்ளதாகத் தெரிகிறது.

இந்திய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள பிற மொழி இனங்களின் எண்ணிக்கை அளவோடு ஒப்பிடுகையில் இது மிகுதி என்பதை மறுப்பார் இல்லை. அதே வேளையில், பிற மொழி பேசுவோர் இந்தி பேசுவோரைவிடக் கூட்டளவில் மிகுதியாக இருக்கின்றனர் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

ஆனாலும், இந்தி மொழியினைத் தாய்மொழியாகக் கொண்டோர் இந்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பரவலாகக் குடியேறியிருக்கவில்லை. ஆறு அல்லது ஏழு மாநிலங்களில் மட்டுமே அவர்கள் குவிந்து கிடக்கின்றனர் என்றும் கூறலாம்.

அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள மொழிகளில் பதினான்கினைப் பேசுவோர் அங்குள்ள மக்கள் பிரிவினர் ஆவர். அவர்களுக்கெல்லாம் இந்தி தாய்மொழியாக இருக்கவில்லை; தெரிந்த மொழியாகவும் இருக்கவில்லை.

இந்திய ஒன்றிய மாநிலங்களின் நிலப்பரப்பு முழுதும் பரவலாகப் பேசப்படும் மொழியாக இல்லாமல், ஒரு குறிப்பிட்ட குறுகிய பகுதியில் மட்டுமே பெசப்படுவதாகவே இந்தி இன்று வரை தொடர்கிறது.

இந்தி பேசும் 43.63% என்போர், இந்திய மாநிலப் பகுதிகளெங்கும் விரவிக் கிடைக்கவில்லை. ஆகவேதான், பெரும்பான்மையோர் பேசும் மொழி என்ற கூற்று அடிப்படையில்லாமல் சரிந்துவிடுகிறது.

அட்டவணை எட்டில் இடம் பெற்றுள்ள மொழிகளில் பெரும்பாலானவை, குறிப்பிட்ட இன மக்களின் தேசிய மொழிகளாக விளங்குகின்றன. இந்தி பேசுவோர் பல தேசிய இனங்களைச் சார்ந்தோர் ஆவர். அவர்களுக்கெனத் தனித்தனியே தேசிய மொழிகள் இருக்கின்றன. இதனால், அவர்களில் பலரால் பேசப்பட்டாலும், ஒரு குறிப்பிட்ட மக்கள் இனத்தின் தேசிய மொழி என்ற பெருமையை இந்தி பெறவில்லை.

இதனால், இந்தி ஒரு தேசிய மொழி அல்லது இணைப்பு மொழி அல்லது தொடர்பு மொழி என்ற தகுதியினை நடைமுறையில் எவ்வகையிலும் பெற்றுவிடவில்லை. இதனை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். இந்தியும் ஒரு குறிப்பிட்ட குறுகிய பகுதியில் வாழ்கின்ற மக்களால் பேசப்படுகின்ற ஒரு மொழி என்ற நிலை மட்டுமே இன்று வரை நீடித்துக்கொண்டிருக்கிறது.

மாறாக, எந்த மாநிலமாக இருந்தாலும், அந்த மாநில இன மக்களின் மொழி, அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் 80 அல்லது 90% மக்களுக்கு மேலாகத் தாய் மொழியாகவும் தெரிந்த மொழியாகவும் பரவிக் கிடக்கிறது. இதனால், அந்த மாநில இன மக்களின் தேசிய மொழியாக, ஆட்சி மொழியாக, தொடர்பு மொழியாக, இணைப்பு மொழியாக அந்த மொழி இயல்பாக அமைந்துவிடுகிறது.

இந்த வேறுபாட்டினைத்தான் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த அடிப்படை நிலைமைகளைத்தான் இந்தியை வலியுறுத்துவோர் காணத் தவறுகின்றனர்.

இதனாலேயே, இந்திய ஒன்றியத்தின் தேசிய மொழியாக மட்டுமின்றி, இணைப்பு அல்லது தொடர்பு மொழியாகும் தன்மைகளையும் தகுதிகளையும் இந்தி இழந்துவிடுகிறது. அத்துடன், பல தேசிய இன மக்கள் வாழும் மாநிலங்களின் ஒன்றியமாக மட்டுமே இந்தியா உருவாக்கப்பட்டிருப்பதால், ஒன்றிய நாடு என்ற அளவுகோலுக்கு அப்பால், அதற்கான தனித் தேசியம் எதுவுமில்லை.

மேலும், தேசிய நீரோட்டத்தில் கலப்பதென்பது, இந்தி மொழி பேசுவதாலோ, ஒரு குறிப்பிட்ட கல்விக் கொள்கையை அனைவரும் ஏற்றுக்கொள்வதாலோ, வேறு எத்தகைய முறையிலோ மட்டும் வருவதில்லை. இன்னும் ஒற்றைத் தன்மையை அனைவர்பாலும் புகுத்துவதால் செயற்கையாகவும் தேசிய நீரோட்டம் உருப்பெற்றுவிடுவதில்லை.

பல்வேறு இனங்களின் தனித்தன்மையுள்ள சமூக, பொருளிய, பண்பாட்டு, மொழி போன்ற போக்குகளை ஏற்றுக்கொண்டு, அவற்றினூடாக மக்கள் நலன்களைப் பேணி வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இணைந்து செயல்படுவது மட்டுமே தேசிய நீரோட்டத்தில் கலப்பதாக இருக்க முடியும்.

இந்த அடிப்படைகளைப் புறக்கணித்துவிட்டு, இந்திய இன மக்களின் ஒன்றியத்தை, சமயம், மொழி, ஆட்சியமைப்பு, கல்வி, பண்பாடு, உணவு, உடை என்பனபோன்றஇன்னும்பலவழிகளில் ஒற்றைத் தன்மையுடையதாக்கக்கூடிய எந்த முயற்சியும் பயன் தராது. அவை பிணைப்பதற்கு மாறாகப் பிரிவினையைத்தான் முன்னெடுக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்திய ஒன்றிய மக்களை அடிமைப்படுத்திய வேற்று நாட்டு மொழியாக இருப்பதாலேயே ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளாமல், உள்ளூர் இந்தியை ஆட்சி மொழியாக்கிய அடிப்படையே தவறானதாகும். ஏனெனில், இந்தியாவைப் பொருத்த மட்டும், இந்தி பேசாத இன மக்களுக்கு இந்தி வேற்று மொழியாகத்தான் இருக்கிறது. இப்படியான பல முரண்களை மேலும் மிகுதிப்படுத்தும் வகையில், தற்போது பா.ச.க. முன்னெடுத்து வரும் சமூக, பொருளிய, பண்பாட்டு, அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டு பார்க்கும்போது, இந்தி அல்லது அவர்களது மனதிலிருக்கும் சமக்கிருதம் பிறருக்கு வேற்று மொழி என்பதற்கு அப்பால், அடிமைப்படுத்தும் மொழியாகவும் உருவெடுத்துக்கொண்டிருப்பதை மறுக்க இயலாது.

இதனால்தான், தேசியக் கல்விக் கொள்கைக்கும் தடைகள் தானாகத் தோன்றிவிடுகின்றன. பாடத்திட்டம் எதுவாக இருந்தாலும் அறிவியல், கணக்கு போன்ற அடிப்படைப் பாடங்களில் பெருத்த வேறுபாடுகள் இருக்கப்போவதில்லை. முதல் அல்லது மூன்றாவது மொழி என்பதோடு மட்டும் எதிர்ப்புகள் அடங்கிவிடவுமில்லை. பண்டைய கல்வி முறை என்று சனாதனத்தைப் புகுத்துவதும், இடைநிற்றலுக்கான இடைச்செருகல்களைத் திணிப்பதும், குலக்கல்விக் கூறுகளைச் சேர்ப்பதும், இவை போன்ற வேறு பல அறிவியலுக்கு அப்பாலான சமூக, பண்பாட்டுப் படையெடுப்புகளுக்கும் சேர்த்துத்தான் எதிர்ப்புகள் எழுகின்றன.

சமூக, பொருளிய, பண்பாட்டு, வரலாற்றுப் பின்புலத்தில் வேறுபட்டு, 144 கோடி என்ற அளவில் வெவ்வேறு வளர்ச்சி நிலைகளில் பெருகிக் கிடக்கும் பல இன மக்கள் வாழும் ஓர் ஒன்றியத்தில், அனைவருக்கும் ஒரே கல்விக் கொள்கை என்பது பொருந்தும் என்பதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அந்தந்த மாநிலங்களின் வேண்டல்களுக்கு ஏற்றதானதொரு கல்விக் கொள்கையை, அவர்களது வரலாற்றுப் பின்புலத்தில், அவர்களே வகுத்துக்கொள்வதில் சிக்கல்களும் எழப்போவதில்லை; தடைகளும் வர வாய்ப்பில்லை.

ஒன்று முதல் அய்ந்தாம் வகுப்பு வரையில் தாய் மொழியில்தான் கற்பிக்கவேண்டும் என்று தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்துவதால், தமிழ் போன்ற மாநில மொழிகளை அது ஊக்குவிக்கிறது என்று கூறுவதும் வேடிக்கையாகத்தான் உள்ளது. குழந்தைகளிடம் இனிப்பைக் காட்டி, இருப்பதையும் பறிக்கும் முயற்சி இது.

இந்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்து மாநிலங்களும் தொடக்கநிலைக் கல்விக்குத் தாய் மொழியைப் பயன்படுத்தவே விரும்புகின்றன. ஆனால், பெற்றோர் மனநிலை, வணிகச் சூழல் போன்றவை இதற்குத் தடையாக இருக்கின்றன. இவற்றை மாற்றுவதற்கான போராட்டங்களும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், ஒன்றிய அரசு நடத்துகின்ற கேந்திரியப் பள்ளிகள், நவோதயாப் பள்ளிகள், பிரதமரின் வளரும் இந்தியாவுக்கான பள்ளிகள் (பிஎம்சிறீ) ஆகியவற்றில்கூட, தேசியக் கல்விக் கொள்கையில் கூறியுள்ளவாறு தொடக்கக் கல்வியினைத் தாய் மொழியில் தருதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில், மாநில மொழிகளைப் பயிற்று மொழியாக்கும் வாய்ப்பு என்று சொல்லுவதை நம்ப முடியவில்லை.

ஏனெனில், தாய்மொழிக் கல்வியினூடாக, தேர்வுகள் அல்லது மதிப்பீடுகள் என்ற பெயரில் இடைநிற்றலுக்கான சூழலும் உருவாக்கப்பட்டுள்ளன. அடுத்து, இடைநிலைக் கல்வியில் புகுத்தப்படும் அறிவியலுக்கும் இன்றைய வளர்ச்சிகளுக்கும் பொருத்தமில்லாப் போக்குகளையும் கணக்கில் கொள்ளாமல் இருந்துவிட முடியாது. தேசியக் கல்விக் கொள்கை, இந்தித் திணிப்புக்காக மட்டுமல்லாமல், அதன் உள்நோக்கங்களுக்காகவும் மறுக்கப்படுகிறது.

இன்னும் வரும்

தொடர்புக்கு : 9444075561

## பேராசிரியர் ந.முத்துமோகனை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார் டி.ராஜா



மதுரைக்கு சிபிஎம் மாநாட்டிற்கு வருகை தந்த இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தேசியப் பொதுச்செயலாளர் து.ராஜா, பேராசிரியர் ந.முத்துமோகன் வீட்டிற்குச் சென்றார். அவரிடமும் குடும்பத்தினரிடமும் நலங்கள் குறித்து வாஞ்சையுடன் உரையாடினார். அவருடன் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, ஏஐடியுசி காசிவிஸ்வநாதன், தகஇபெ மருத்துவர் த.அறம், மாநகரச் செயலாளர் முருகன் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் காளிதாஸ், தஒவாஇ பழனிக்குமார் ஆகியோர் சென்றிருந்தனர். மறைந்த சேதுராமன் வீட்டிற்கும் சென்று குடும்பத்தினரிடம் நலம் விசாரித்தார்.

# மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம்

வீர, தீர வரலாற்றில் எண்ணற்ற தியாகங்களைச் செய்து நூற்றாண்டு காணும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 26வது மாநில மாநாடு தியாக பூமியாம் சேலத்தில் 2025 ஆகஸ்ட் 15, 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு காணும் தருணத்தில் 34 உயிர்த் தியாகம் செய்த தியாக பூமியாம் சேலத்தில் மாநாட்டை வெற்றிகரமாகவும் சிறப்புடனும் நடத்திட மிகுந்த எழுச்சியுடன் மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம் ஏப்ரல் 6 சேலத்தில் மாவட்டச் செயலாளர் அ.மோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புக் குழு கூட்டத்தை தொடக்கி வைத்து திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் பேசினார். சேலம் மாவட்டத்தின் வரலாறுகள் குறித்துப் பேசினர். மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி அவர்களும் அருகாமை மாவட்டங்களான தர்மபுரி மாவட்டச் செயலாளர் கலைச்செல்வன் கிருஷ்ணகிரி மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.லகுமையா ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன் குமார் டி.மாதேஸ்வரன் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் திருப்பூர் புறநகர் மாவட்டச் செயலாளர் இசாக் நாமக்கல் மாவட்டச் செயலாளர் அன்புமணி கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் ஆர்.ராமசாமி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான பணிகளை மேற்கொள்வது குறித்து மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நிறைவுறை நிகழ்த்தினார். மாநில மாநாட்டை நடத்துவதற்காக 281 பேர் கொண்ட






வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது. வரவேற்புக் குழு தலைவராக எ.கந்தன் செயலாளரான ஏ.மோகன் பொருளாளராக பழ.ஜீவானந்தம் துணைத் தலைவர்களாக ப.பரமசிவம், டி.வி.கருணைதாஸ், டி.கண்ணன், எம்.முனுசாமி, என்.எம். சடையன், எஸ்.தனக்கோட்டி, எஸ்.பாலன், எஸ்.சம்பத், எம்.கணேசன் வரவேற்புக் குழு துணைச் செயலாளராக எம்.ராமன், க.பாரதி, பா.தினேஷ், எம்.பாலன், என்.கே.செல்வராஜ், இரா.ரமேஷ், எஸ்.பி.கே.ராமச்சந்திரன், எம்.ஷாணவாஸ்கான், பி.மணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு நம்பிக்கை ஊட்டுகின்ற வகையில் வரவேற்புக் குழுவில் கலந்து கொண்ட தோழர்கள் சிறிய வயது குழந்தைகள் முதல் பெண்கள் என அனைவரும் அவர்களால் முடிந்த தொகையையும் அளித்தனர்.


ஆத்தூர் வட்டத்தைச் சார்ந்த இ.ஆர்.கே (எ) ராமச்சந்திரன் தன் கைகளில் அணிந்திருந்த சுத்தியல் அரிவாள் பொறித்த அரைச் சவரன் மோதிரத்தை மாநாட்டிற்காக மாநிலச் செயலாளர்யிடம் வழங்கினார்.

வங்கி ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் கே.சுவமிநாதன் ரூபாய் 25000, சூரமங்கலம் மண்டலம் ஜே.மணிகண்டன் ரூபாய் 10000 என்று மாநில மாநாட்டிற்கு நிதியாக வழங்கினார். மற்ற தோழர்கள் தாங்கள் இவ்வளவு தொகைகளைத் தருகிறோம் என ஒப்புக்கொண்டனர். சிறியவர்கள் அவர்கள் சேமித்து வைத்த தொகையைத் தந்தது நெகிழ்ச்சி அளிக்கிறது. மாநாடு சிறு குழந்தைகள் முதல் மூத்த தோழர்கள் வரை அனைவரின் கூட்டுப் பணியில் சிறப்பாக நடைபெறும் என்ற நம்பிக்கையையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் வகையில் வரவேற்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பணிகளைத் தொடருவோம். சேலத்தில் வீதிகள் தோறும், கிராமங்கள் தோறும் மாநாட்டுச் செய்திகளை, விளம்பரங்களை, மக்கள் பேசுகின்ற வகையில் கொண்டு செல்வோம் எனச் சூளுரைத்தனர்.

## பெருமிதம் கொள்கிறோம்!

சேலத்தில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர் கு.சிதம்பரம் மாநாட்டு நிதியாக ரூ.2000 ஐ தோழர் இரா.முத்தரசன் அவர்களிடம் வழங்கினார்.

இந்த நிதி, அவரது மாற்றுத்திறனாளி மனைவிக்கு தமிழ்நாடு அரசு மாதம் தோறும் வழங்கும் 2000 ரூபாய் நிதியாகும். அந்நிதியின் முழுத் தொகையையும் அவரது மனைவியின் சார்பில் மாநாட்டிற்காக வழங்கினார்.



# அதிபர் டிரம்ப் நடவடிக்கைகளைக் கண்டித்து அமெரிக்காவில் தீவிரமடையும் போராட்டம்




டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபராக பதவியேற்றது முதல் எடுத்துவரும் நடவடிக்கைகள் சர்ச்சைக்கு உள்ளாகி வருகின்றன. அமெரிக்கா பல நாடுகளுக்கு அளித்துவந்த நிதியுதவியை குறைத்ததுடன், யுஎஸ் எய்டு மூலம் பல்வேறு நாடுகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியை முழுவதும் நிறுத்தினார். அதில் பணிபுரிந்த ஊழியர்களை நீக்கினார். தொழிலதிபர் எலான் மஸ்க் பரிந்துரைப்படி அரசாங்கத்தின் சில துறைகளைக் கலைத்தார். ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்தார்.

அமெரிக்க பொருட்களுக்கு பல்வேறு நாடுகள் அதிக வரி விதிப்பதாக குற்றம்சாட்டிய அதிபர் டிரம்ப், இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது பரஸ்பர வரியை அதிகமாக விதித்துள்ளார். இதனால் அமெரிக்காவில் பொருட்களின் விலை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், அதிபர் டிரம்ப் எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கண்டித்து அமெரிக்காவில், 50 மாகாணங்களில் உள்ள 1,200 நகரங்களில் போராட்டங்கள் வெடித்தன. இவற்றில் பல லட்சம் பேர் பங்கேற்றனர். அதிபர் டிரம்ப் எடுத்துவரும் நடவடிக்கைகளை கைவிட வலியுறுத்தி முழக்கமிட்டனர். வாஷிங்டன், சிகாகோ, புளோரிடா நகரங்களில் மட்டும் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் போராட்டங்களில் பங்கேற்றனர்.





## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட 25 வது மாநாடு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட 25வது மாநாடு பனமரத்துப்பட்டி வீரபாண்டி ஒன்றியம் காட்டூர் பாலமுருகன் திருமண மண்டபத்தில் எம்.ராமன், பழ.ஜீவானந்தம் என்.கே.செல்வராஜ், எஸ்.கலையரசி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை ப.பரமசிவம் ஏற்றிவைத்தார். மாநாட்டை திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் துவக்க உரையாற்றினார்.

இதில் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.லகுமையா, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் க.பாரதி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆகியோர் நிறைவுறையாற்றினர். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள பாக்கி உடனடியாக வழங்க வேண்டும்.

கிராம ஊராட்சிகளை சேலம் மாநகராட்சி உடன் இணைக்கக் கூடாது. சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி பகுதியில் ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும் உட்பட 20 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. ஏற்கெனவே செயல்படும் நிர்வாகிகள் தொடர்ந்து செயல்படுவார்கள் என்று முடிவு செய்யப்பட்டது.

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.
16 ஏப்ரல் 13 ஏப்ரல் 19 2025 ஜனசக்தி JANASAKTHI Tamil Weekly Cell: 9444331138 Day of Publication: Every Thursday Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026 WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026 Posted on Every Friday & Saturday Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# அகில இந்திய விவசாயிகள் சங்கம்

# 30வது தேசிய மாநாடு

**நாள்:** 2025 ஏப்ரல் 15, 16, 17

**இடம்:** தோழர் அதுல் குமார் அஞ்சான் நினைவரங்கம், வி.பி.என் திருமண மஹால், நாகப்பட்டினம்

## பொது மாநாடு 15 ஏப்ரல் 2025

கொடியேற்றுபவர் : **தாராசிங் சித்து**

தியாகிகள் நினைவுச்சின்னம் திறப்பாளர்: **கோ.பழனிசாமி** முன். எம்.எல்.ஏ.

வரவேற்புரை : **வை.செல்வராஜ்** எம்பி, வரவேற்பு குழு தலைவர்,

தலைமை : **இராஜன் கிஸ்சி சாகர்** தலைவர் ஏ.ஐ.கே.எஸ்.

முன்னிலை : **ராவுல வெங்கையா** பொதுச்செயலாளர் ஏ.ஐ.கே.எஸ்.

தொடக்க உரை : மாண்புமிகு **பி.பிரசாத்** வேளாண் துறை அமைச்சர், கேரளா அரசு

சிறப்புரை : மாண்புமிகு **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர்
மாண்புமிகு **அன்பில் மகேஷ் பொய்யாமொழி** பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்

வாழ்த்துரை : **ராஜாராம் சிங்** எம்.பி, பொதுச் செயலாளர் ஏ.ஐ.கே.எம்.எஸ்
**விஜி கிருஷ்ணன்** பொதுச் செயலாளர் ஏ.ஐ.கே.எஸ், **ராகேஷ் திகாயத்** தலைவர் பி.கே.யூ
**ஜோகிந்தர் உக்ரஹன்** பி.கே.யு. EKALA, **தர்சன் பால் சிங்** தலைவர் கே.கே.யு
**என்.பெரியசாமி** அகில இந்திய தலைவர் பி.கே.எம்.யூ,

நன்றியுரை : **பி.எஸ்.மாசிலாமணி** வரவேற்புக் குழு செயலாளர்

## பிரதிநிதிகள் மாநாடு

15 ஏப்ரல் 2025
17 ஏப்ரல் 2025

சிறப்புரை தோழர்கள்:

**டி.ராஜா** பொதுச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
**ராஜன் கிஸ்சி சாகர்** தலைவர், ஏ.ஐ.கே.எஸ்
**ராவுலா வெங்கையா** பொதுச் செயலாளர், ஏ.ஐ.கே.எஸ்
**இரா.முத்தரசன்** மாநிலச் செயலாளர், சிபிஐ
**கே.சுப்பராயன்** எம்பி, ஏ.ஐ.கே.எஸ்
**சிவகுரு.பாண்டியன்** பொருளாளர், வரவேற்புக் குழு

## விவசாயிகள் பேரணி

17 ஏப்ரல் 2025 வியாழன் மாலை 4 மணி
நாகை அவுரி திடல்

## பொதுக்கூட்டம்

மாலை 5 மணி. நாகை காடம்பாடி
வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் திடல்

## கலை நிகழ்ச்சி

திரைப்பட, சின்னத்திரை
புகழ் கலைமாமணி தஞ்சை
**சின்னப்பொண்ணு குமார்**
குழுவினரின் நாட்டுப்புற கலை நிகழ்ச்சி

இவண்: **வரவேற்புக் குழு**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.